பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 28 சனிக்கிழமை 10.04.2021 கதிர் 156

### இது ரகசியம் அல்ல!

நல்லாட்சி அரசின் கீழ் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து இயங்கியது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. அந்த விடயம் விட்ட குறை, தொட்ட குறையாக இன்னும் நீடிக்கின்றது போலும். அது தொடர்பான ஒரு சம்பவம் இது.

கடந்த உள்ளூராட்சித் பக்கம்02

## வடக்கிற்கு இந்தியா வழங்கிய 500 டிராக்டர்களில் கணிசமானவை வெளியிடங்களுக்கு அனுப்பப்படும்?

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப்.10

வடக்கு மாகாணத்திற்கு 2010ஆம் ஆண்டு இந்திய அரசினால் வழங்கப்பட்ட சுமார் ஐந்நூறு டிராக்டர்களில் அதிகமானவற்றை வெளி மாகாணத்திற்கு எடுத்துச் செல்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன என அறியவருகின்றது.

கமநல சேவை திணைக்களங்களிற்கு உட்பட்ட கமநல சேவை நிலையங்களில் பயன்படுத்தப்படாமல் இருக்கும் டிராக்டர்களை பிற மாவட்டங்களிற்கு வழங்கும் வகையில் டிராக்டர் விவரங்களை அனுப்பி வைக்குமாறு மாவட்ட கமநல உதவி ஆணையாளர்களிடம் கோரப்பட்டுள்ளது.

இதற்கான அறிவித்தல் கடிதங்கள் கமநல சேவை ஆணையாளர் நாயகத்தினால் சகல மாவட்டங்களிற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

2010ஆம் ஆண்டு இந்தியத் தூதரகத்தினால் வடக்கு மாகாணத்திற்கு வழங்கப்பட்ட 500 டிராக்டர்களில் அதிகமானவை தற்போது வடக்கின் 5 மாவட்டங்களிலும் நூற்றுக் கணக்கில் பாவனை இன்றியே தரித்து நிற்கின்றன. பாவனை இன்றி நிற்கும் டிராக்டர்கள் வெளிமாகாணத்திற்கு எடுத்துச் 2

# யாழ்.நகர மேயர் மணிவண்ணன் கைதாகிப் பிணையில் விடுவிப்பு

## தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் வழக்குத் தாக்கல்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப்ரல் 10

பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் வி. மணிவண்ணன் நேற்று இரவு யாழ்ப்பாணம் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டார். அவர் மீது தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2



## அமெரிக்கா கவலை



யாழ்ப்பாணம் மாநகர மேயர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டமை கவலையளிக்கின்றது என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்லிட்ஸ் நேற்று வெளியிட்டுள்ள ருவிட்டர் பதிவிலேயே இவ்வாறு கவலை 2

## பொலிஸாரின் அச்சுறுத்தலுக்கு அடிபணியேன் என்கின்றார் மணி

பொலிஸாரின் அச்சுறுத்திப் பணியவைக்கும் கேவலமான அராஜகச் செயற்பாடுகளுக்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை எனத் தெரிவித்துள்ள யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், நகரின் தூய்மையைப் பேண நடவடிக்கை எடுத்தது அவர்களின் பார்வையில் தவறென்றால் அதே தவறைத் தொடர்ந்து செய்வோம் எனவும் கூறினார்.

சட்டம் ஒழுங்கின் பிரகாரமும் மாநகர சபைக்கும் அதன் முதல்வருக்கும் இருக்கின்ற அதிகாரத்தின் பிரகாரமுமே நான் தூய்மைச் செயற்பாடுகளை முன்னெடுக்க காவல் பணியாளர்களை நியமித்தேன். இந்நிலையில் மாநகர சபையில் சுயாதீனத்துக்கு அச்சுறுத்தல் விடுகின்ற கேவலமான செயற்பாடே எனது கைது எனவும் மணிவண்ணன் தெரிவித்தார்.

பயங்கரவாத 2

## மணிவண்ணனின் கைது ஓர் அரசியல் பழிவாங்கல்



### சபையில் கஜேந்திரகுமார் எம்.பி. சீற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபை மேயர் வி.மணிவண்ணனின் கைது ஓர் அரசியல் பழிவாங்கல் என்றே தோன்றுகின்றது எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 2

## திருநெல்வேலியில் 22 பேர் உட்பட யாழில் 24 பேருக்குக் கொரோனா

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் மேலும் 24 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடம் மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடம் இரண்டிலும் 760 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போது, 26 பேருக்குத் தொற்று கண்டறியப்பட்டது. இவர்களில் யாழ்ப்பாணத்தில் 24 பேரும், 2

## கடலில் மிதந்து வந்த போத்தலுக்குள் இருந்த திரவத்தைக் குடித்தவர் சாவு!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப்.10

கடலில் மிதந்து வந்த போத்தலில் இருந்த திரவத்தை மதுபானம் என எண்ணி நேற்றைய தினம் பலர் இணைந்து பருகியுள்ளனர். அரவர்களில் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

கந்தையா ஸ்ரீகுமார் என்னும் நாகர் கோவில் வடக்கைச் சேர்ந்தவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். 2

## 12ஆம் திகதி பொது விசேட விடுமுறை

தமிழ் – சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு எதிர்வரும் 12ஆம் திகதி திங்கட்கிழமை விசேட பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறியால் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய இந்த விசேட பொது விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது எனப் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிட்டுத் தெரிவான பல நூற்றுக்கணக்கானோர் ஜனாதிபதித் தேர்தலை அடுத்து – பொதுத் தேர்தலுக்கு இடையில் – சஜித் பிரேமதாஸவின் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து விட்டனர். இத்தகையோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தயாராகின்றது ஐக்கிய தேசியக் கட்சி. ஐக்கிய மக்கள் சத்தியுடன் தம்மை அடையாளப்படுத்திய ஐ.தே.கவினருக்கு ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் ரங்கே பண்டார சட்ட ரீதியான எச்சரிக்கைக் கடிதங்களை அனுப்பி வருகின்றார்.

வழமையாக இத்தகைய கடிதங்களை – பல நூற்றுக் கணக்கில் அனுப்பும்போது – நாடாளுமன்றத்தால் எம்.பிக்களுக்கு இலவசமாக வழங்கப்படும் நாடாளுமன்ற முத்திரைகளை அரசியல் கட்சிகள் பயன்படுத்துவது வழமை. பல நூற்றுக் கணக்கில் ஒவ்வொரு எம்.பிக்கும் இந்த முத்திரைகள் மாதாந்தம் அள்ளி வழங்கப்படும். இந்த முத்திரைகளை ஒட்டிதபால்களை அஞ்சல் செய்யும் போது, அந்த 'என்வலப்'பில் அதனை அனுப்பும் எம்.பியின் றப்பர் ஸ்டாம்ப், அனுப்புவருக்குரிய பகுதியில் பதியப்பட வேண்டும்.

பொதுவாக அரசியல் கட்சிகள் தங்களுடைய கட்சிச் செயற்பாடுகளுக்கான கடிதங்களை அனுப்ப இந்த 'ஓஸி' அஞ்சலைத் தான் பயன்படுத்துவது வழமை. தேர்தல் அறிவிக்கப்பட்டமைக்குப் பின்னர் தேர்தல் பிரசாரத்துக்குத்தான் இந்த ஓஸி அஞ்சலைப் பயன்படுத்தக் கூடாது என்ற கட்டுப்பாடு உள்ளது.

இப்படி ஓர் ஓஸி ஏற்பாட்டை இப்போது பயன்படுத்துவதில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஓர் இக்கட்டு உண்டு. அக்கட்சிக்கு இப்போது ஓர் எம்.பி. கூட பதவியில் இல்லை. தேசியப் பட்டியலில் கிடைத்த ஓரிடத்துக்குக் கூட இன்னும் ஒருவரை அக்கட்சி நியமிக்கவில்லை.

அதனால் எம்.பிக்களுக்குரிய 'ஓஸி' அஞ்சலைப் பயன்படுத்துவதில் அக்கட்சிக்குச் சிக்கல். அதனால் அக்கட்சி ஒரு குறுக்கு வழியை நாடியிருக்கின்றது.

அக்கட்சியின் சார்பில் உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவான உறுப்பினர்களுக்கு அக்கட்சியின் செயலாளர் எழுதிய மேற்படி கடிதங்களில் அஞ்சல் உறைகளில் நாடாளுமன்றின் ஓஸி முத்திரைகள் ஒட்டப்பட்டிருந்தன. அனுப்பும் எம்.பியின் பெயரில் யாருடைய றப்பர் ஸ்டாம்ப் இருந்தது தெரியுமா?

நமது கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான ரெலோவின் தலைவர் அடைக்கலநாதன் எம்.பியின் பெயரிலான 'றப்பர் ஸ்டாம்' தான் குத்தப்பட்டிருந்தது.

தனது பெயரில், 'ஒஸி' அஞ்சலை ஐ.தே.கட்சி பயன்படுத்த செல்வம் எம்.பிதான் அனுமதித்தாரா? அல்லது அவருக்குத் தெரியாமல் அவரின் றப்பர் ஸ்டாம்ப்பை ஐ.தே.கட்சி செயலாளர் தரப்பு பயன்படுத்துகின்றதா? தெரியவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் உள்ளூராட்சி உறுப்பினர் ஒருவரை அக்கட்சியின் நிர்வாகம் கட்சியிலிருந்து வெளியேற்ற முயன்றமையை எதிர்த்து அந்த உறுப்பினர் வழக்குக்குப் போயிருக்கின்றார். கட்சித் தலைவர் ரணில் விக்கிமசிங்க உட்பட அக்கட்சி நிர்வாகத்துக்கு எதிராக இவ் வழக்கில் இடைக்காலத் தடையும் விதிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்குக்கும் இப்படி செல்வம் அடைக்கலநாதன் பெயரில் 'றப்பர் ஸ்டாம்ப்' பதித்து அனுப்பப்பட்ட கடிதத்தின் உறை சம்பந்தப்பட்ட தரப்புகளினால் எடுத்துச்செல்லப்படுவதாகத் தெரிகின்றது.

அந்த வழக்குக்காக செல்வம் தரப்பும் நீதிமன்றப் படியேற வேண்டி வருமோ, என்னவோ தெரியவில்லை.

எது, எப்படியோ, தமிழ்க் கூட்டமைப்புக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலான தொடர்பு விட்ட குறை, தொட்ட குறையாகத் தொடர்வது என்னவோ உண்மை தான் போலும்.

★ ★ ★

நேற்று அதிகாலை 01.30 மணிக்கு யாழ்.மேயர் மணிவண்ணன் கைது செய்யப்படுகின்றார் என்ற தகவல் யாழ்.பொலிஸ் நிலையத்தில் வைத்து அவருக்குத் தெரிவிக்கப்பட்டது. அதனோடு தமிழர் தரப்பு எங்கும் பரபரப்புத் தொற்றிக் கொண்டது.

எமது பத்திரிகையின் நேற்று மாலை இதழுக்குரிய செய்திகளைத் தொகுத்துக் கொண்டிருந்த ஆசிரியபீட பிரதிநிதி ஒருவர், அக்கைது குறித்து பல தமிழ்த் தலைவர்களினதும் பிரதிபலிப்புகளை செய்தியாகத் தொகுத்துக்கொண்டிருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் என்ற முறையில் இரா.சம்பந்தன் எம்.பியின் கருத்தையும் அவர் பெற விரும்பினார். மேயர் மணிவண்ணன் கைதாகி சுமார் பன்னிரெண்டு மணி நேரம் கழித்து நேற்று பிற்பகல் 1.30 மணி அளவில் இரா.சம்பந்தனோடு தொலைபேசியில் தொடர்பு கொண்ட அவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

*"மேயர் மணிவண்ணன் கைதா? எனக்குத் தெரியாதே. எப்போது கைது செய்தார்கள்? ஏன், என்ன நடந்தது?"* – என்று பதில் கேள்வி எழுப்பினார் தமிழர் தரப்பின் மூத்த தலைவர் இரா.சம்பந்தன். அவருக்கு நடந்த விடயங்களை விளக்கமாகக் கூறி தொலைபேசியை வைத்தார் நமது ஆசிரிய பீடப் பிரதிநிதி.

இந்தளவில்தான் தமிழ்க் கூட்டமைப்பின் நிலைமை உள்ளது. எப்படி கட்சித் தேறப் போகின்றதோ, ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம்!

★ ★ ★

யாழ்.மேயர் வீ.மணிவண்ணன் கைது நேற்றுக் காலை அதிர்வை ஏற்படுத்திய திடீர் நடவடிக்கை. நேற்று இரவே அவர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டமை, அடுத்த திடீர் நடவடிக்கையாக அமைந்தது.

அது மட்டுமல்ல, விடுதலைப் புலிகளை மீளுருவாக்கம் செய்ய முயன்றார் என்று குற்றம் சுமத்தப்பட்ட மேயர் மீது பயங்கரவாதத் தடுப்புச சட்டம் பாயவில்லை. ஆக, தண்டனைச் சட்டக் கோவை சரத்துக்களே பாய்ந்துள்ளன.

அவர் கைது தொடர்பில் அமெரிக்க தூதுவர் விரைந்து டுவிட் மூலம் கவலை தெரிவிக்கும் சூழ்நிலையும் ஏற்பட்டது.

இவை எல்லாம் சும்மா தன்பாட்டில் நிகழ்ந்தவையல்ல. சட்ட சாணக்கியம், தகுந்த மட்டங்களில் காய் நகர்த்தியமையின் விளைவு.

அதனை நான் விவரிக்கப் போனால் இரண்டு சிக்கல்கள். சில சமயம் சட்டம் என் மீது பாயும். அல்லது சட்ட சாணக்கியம் மீது கசப்புணர்வு கொண்ட தரப்புகள் என் மீது பாயும்.

நமக்கேன் வீண் வம்பு...? காரியங்கள் தன்பாட்டில் நடக்கவில்லை, சில தரப்புகளின் சாதுரியத்தால் நடந்தன என்பதை மட்டும் வாசகர்களுக்குக் குறிப்பால் உணர்த்தி அமைகிறேன். எனது வாசகங்களில்வரிகளுக்கு இடையில்எழுதப்படாமல் புதைந்து கிடக்கும் உண்மைகளை எம் வாசர்கள் தாங்களே புரிந்து கொள்வர். அவர்கள் அத்துணை புத்திசாலிகள்...!

– மின்னல் –

## வடக்கிற்கு இந்தியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செல்லப்படும் சூழல் காணப்படுகின்றது

யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு 109 டிராக்டர்கள் இந்தியாவினால் வழங்கப்பட்டன. அதில் 13 டிராக்டர்கள் வெளி மாவட்டங்களுக்குப் பின்னர் அனுப்பப்பட்டன. எனினும் பின்னர் கமநல சேவை திணைக்களமே வேறு 13 டிராக்டர்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்தது. அதன் பிரகாரம் யாழ்ப்பாணத்தில் விடப்பட்ட 109 டிராக்டர்களில் 84 இயங்கு நிலையிலும் எஞ்சிய 25 உம் திருத்த வேண்டிய நிலையிலும் உள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்திற்கு 100 டிராக்டர்கள் இந்தியாவினால் வழங்கப்பட்ட போதும் இதில் 21 டிராக்டர்கள் மட்டுமே இயங்கு நிலையில் உள்ளன. ஏனைய 79 டிராக்டர்களும் பழுதடைந்த நிலையில் உள்ளன.

மன்னார் மாவட்டத்திற்கு 100 டிராக்டர்கள் இந்தியாவினால் வழங்கப்பட்டன. இதில் 39 டிராக்டர்கள் நல்ல நிலையில் இயங்குகின்றன. மேலும் 45 டிராக்டர்கள் பழுதான நிலையில் நிற்கும் அதே நேரம், எஞ்சியவற்றில் 2 டிராக்டர்கள் கண்டி மாவட்டத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்டுவிட்டன். மிச்சமான14 டிராக்டர்கள் நகர சபைக்கும் பிற தரப்புகளுக்கும் வழங்கப்பட்டுவிட்டன.

வவுனியா மாவட்டத்திற்கு இந்திய அரசினால் 64 டிராக்டர்கள் வழங்கப்பட்ட போதும் தற்போது 60 டிராக்டர்களே மாவட்டத்தில் உள்ளன. இந்த 60 டிராக்டர்களில் 27 டிராக்டர்களே இயங்குகின்றன. இதேநேரம் வெளியே வழங்கப்பட்ட 4 டிராக்டர்களில் ஒன்று இராணுவத்திற்கும் ஒன்று கண்டிக்கும் வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிகின்றது.

இதேபோன்று முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 120 டிராக்டர்கள் இந்தியாவினால் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## பொலிஸாரின் அச்சுறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குற்றத்தடுப்பு பிரிவால் கைது செய்யப்பட்ட யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணன் நேற்று யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டுபிணையில்விடுவிக்கப்பட்டார்.

இதன் பின்னர் தனது சார்பாக சட்டத்தரணிகள் சகிதம் நீதிமன்றம் முன்பாக செய்தியாளர்களிடம் பேசும்போதே மணிவண்ணன் இவ்வாறு தெரிவித்தார்.

என்னை யாழ் பொலிஸ் நிலையம் அழைத்த பொலிஸார் நீண்ட நேரம் விசாரணை செய்தனர். பின்னர் அதிகாலை 2 மணி அளவில் உங்களைக் கைது செய்து பயங்கரவாத தடுப்ப பிரிவிடம் ஒப்படைக்கிறோம் எனத் தெரிவித்தனர். பின்னர் என்னை வவுனியா கொண்டு சென்று தடுத்து வைத்து வாக்குமூலம் பெற்றனர்.

மாநகர சபை பணியாளர் நியமனம் மற்றும் அவாகளின் சீருடை விடயத்தில் புலிகளை மீள் உருவாக்கம் செய்வதாக என்மீது குற்றச்சாட்டப்பட்டது.

மாநகர சபையின் சட்டவரம்பின் கீழ் செயற்பட்டது பயங்கரவாதமா? –என மணிவண்ணன் கேள்வி எழுப்பினார்.

வாக்குமூலத்தின் பின் பயங்கரவாத தடைச்சட்டததின் கீழ் என்மீது வழக்குப் பதிவு செய்யாமல் தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் வழக்குப் பதிவு செய்தனர்.

மாநகர சபையின் சுயாதீன செயற்பாடுகளில் செயற்படுகின்ற எந்த அதிகாரமும் பொலிஸாருக்கு இல்லை.

பொலிஸாரின் இவ்வாறான அராஜகச் செயற்பாட்டுக்கு எதிராக தொடர்ந்து சட்ட ரீதியாகப் போராட நான் தயார். பொலிஸ் அராஜகத்தை ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை எனவும் மணிவண்ணன் கூறினார்.

அத்துடன், தனக்கான ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் உள்ளிட்ட அனைத்து சட்டத்தரணிகளுக்கும் அவா நன்றி தெரிவித்தார்.

மேலும் வவுனியா வந்த சட்டத்தரணிகள், எனது விடுதலைக்காக குரல் எழுப்பிய எனது ஆதரவாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றி கூறுகிறேன் எனவும் மணிவண்ணன் கூறினார்.

## திருநெல்வேயிலில் 22...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கிளிநொச்சி, முல்லைத்தீவில் தலா ஒருவரும் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டனர்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலும் ஒருவருக்குத் தொற்று கண்டறியப்பட்டது.

யாழ்ப்பாணம் திருநெல்வேலி பொதுச் சந்தை மற்றும் கடைத் தொகுதிகளைச் சேர்ந்த 22 பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இவர்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் 14 நாட்களின் பின் நேற்று முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே தொற்று கண்டறியப்பட்டது.

கிளிநொச்சி, முல்லைத்தீவில் தலா ஒருவர் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டனர். இவர்கள் இருவரும் சுய தனிமைப்படுத்தப்பட்டவர்கள் – என்றார்.

## யாழ்.நகர மேயர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைப் பரப்பிற்குள் சபை நிர்வாகத்திற்கு உற்பட்ட குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நியமிக்கப்பட்ட ஊழியர்களிற்கு வழங்கப்பட்ட சீருடை விடுதலைப்புலிகளை மீள்உருவாக்கத்தை காட்டுவதாக தெரிவித்து யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு நேற்று முன்தினம் அழைக்கப்பட்ட மாநகர முதல்வர் நேற்று அதிகாலை 1.45 மணிக்கு கைது செய்யப்பட்டு பயங்கரவாத தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டு வவுனியாவிற்குக் கொண்டுசெல்லப்பட்டார்.

அவர் நேற்று இரவு 8 மணியளவில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

இதன்போது மாநகர முதல்வர் வி. மணிவண்ணன் சார்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தலைமையில் 20ற்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் ஆஜராகினர்.

இதன்போது இலங்கை தண்டனைச் சட்டக் கோவை பிரிவுகள் 120, 332, 343 ஆகிய இலக்கங்களின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு குற்றம் சாட்டப்பட்டவரைத் தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்க அனுமதிக்க வேண்டும் எனப் பொலிஸார் கோரிக்கை விடுத்தனர்.

அதனை ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் ஆட்சேபித்தார்.

"யாழ்ப்பாணம் மாநகர சபையின் அதிகாரத்திற்கு உட்பட்ட மாநகர சபை கட்டளைச் சட்டம் 73, 78, 83 ஆகிய பிரிவுகளின் கீழான பணியை பிரதம நிறைவேற்று அதிகாரி என்றவகையில் நிறைவேற்றியவர் என்ற காரணத்திற்காக அவரைத் தண்டிக்க முடியாது. அதேநேரம் புலிகளின் காவல் துறையின் சீருடையின் நிறத்தை ஒத்த நிறத்தில் இந்தச் சீருடை இருப்பதாகக் கூறி அதைப் பார்த்து பொலிஸார் மிரள்வது, போர் முடிந்து ஓர் தசாப்பதமாகியும் அந்த திகைப்பில் இருந்து பொலிஸார் இன்னும் மீளவில்லை என்பதனையே காட்டுகின்றது என்று வாதிட்டார் சுமந்திரன்.

இதேநேரம் இது மாநகர சபையின் தீர்மானத்தை நிறைவேற்றிய செயல் என்பதோடு அதனை உறுதி செய்யும் வகையில் மாநகர சபையின் உறுப்பினரும் மற்றுமோர் சட்டத்தரணியுமான மு.றெமீடியஸும் கூட மணிவண்ணன் சார் பில் நீதிமன்றில் ஆஜராகியுள்ளார் எனச் சுட்டிக்காட்டினார்.

மாநகர சபை ஊழியர்கள் அணிந்த உடையில் விடுதலைப் புலிகளின் அடையாளம் சார்பில் ஏதும் உண்டா என நீதிபதி வினாவியபோது பொலிஸார் இல்லை எனப் பதிலளித்த நிலையில் முதல்வரை 2 லட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவித்தமையோடு வழக்கை ஜூன் மாதம் 24 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

## கடலில் மிதந்து வந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இவரின் உடல்நிலை பாதிக்கப்பட்டமையை அடுத்து பருத்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து மர்மத் திரவத்தை அருந்தியமேலும்சிலர்வைத்தியசாலைக்கு சென்று தங்களை பரிசோதிக்குமாறு கேட்டுள்ளமையுடன், கடலில் மிதந்துவந்த போத்தலையும் வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர் எனத் தெரியவருகின்றது

## அமெரிக்கா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெளியிடப்பட்டுள்ளது. எல்லோருடைய அடிப்படைச் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் அதேவேளை, பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராடுவதற்கு நீதித்துறை பாதுகாப்புகளுடன் கூடிய வலுவான சட்ட விதிமுறைகளைக் கொண்டிருப்பது சிறந்த வழியாகும் என்றும் அந்தப் பதிவில் அமெரிக்கத் தூதுவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## 12ஆம் திகதி பொது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழ், சிங்களப் புத்தாண்டு எதிர்வரும் 14ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது.

இந்நிலையில், எதிர்வரும் 13ஆம், 14ஆம் திகதிகள் விடுமுறை நாட்கள் என்பதால் அதற்கு முதல் நாள் 12 ஆம் திகதியையும் பொது விடுமுறை தினமாக அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனா நெருக்கடி நிலையைக் கருத்தில்கொண்டு புத்தாண்டு பண்டிகயை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றிக் கொண்டாடுமாறு சுகாதார அதிகாரிகள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

## மணிவண்ணனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

யாழ்.மாநகரசபை மேயர் மணிவண்ணன் எமது கட்சியின் முன்னாள் உறுப்பினராவார். யாழ். மாநகர சபையின் காவல் படைக்குத் தமிழீழ விடுதலைப்புலிகளின் காவல் துறையின் சீருடையை ஒத்த சீருடைகளை வழங்கினார் என்ற குற்றச்சாட்டில் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இளநீல சீருடை அணிபவர்களையெல்லாம் குற்றவாளிகளாகக் காட்டவே நீங்கள் முற்படுகின்றீர்கள். மணிவண்ணனின் கைது ஓர் அரசியல் பழிவாங்கல் என்றே தோன்றுகின்றது.

நாங்கள் நினைத்துக்கூடப் பார்க்க முடியாதளவுக்கு நாடு இராணுவ ஆட்சியை நோக்கிச்செல்கின்றது. தமக்குப் பிடிக்காதவர்கள், எதிரானவர்கள் அடக்கப்படுகின்றனர்.

எனவே, அரசின் சிரேஷ்ட உறுப்பினர்கள் இது குறித்து கவனம் செலுத்த வேண்டும் – என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மேயர் மணிவண்ணனின் கைது சட்டம், தார்மீகத்துக்கு அப்பாற்பட்டது

யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணனைக் கைது செய்தமை சட்டரீதியாகவோ அல்லது தார்மீகரீதியாகவோ நியாயப்படுத்த முடியாத ஒன்று. பணியாளருக்கு வழங்கப்பட்ட சீருடைகளின் நிறங்களை வைத்து அவர் புலிகளை மீளுருவாக்கம் செய்கிறார் எனக் குற்றம் சுமத்துகின்றமை கேலிக்குரியது என் பதற்கப்பால் இலங்கை ஆட்சியாளரின் எதேச்சதிகாரத்தையும் தமிழினத்தின் மீதான அவர்களின் குரூர உணர்வையும் வெளிப்படுத்தி நிற்கிறது.

– இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ் மன்னள் கூட்டணியின் ஊடகப் பேச்சாளர் க.அருந்தவபாலன்.

யாழ்.மேயரின் கைது தொடர்பாக அவரது கண்டன ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

முதல்வர் என்றவகையில் உள்ளூராட்சிச் சட்டவிதிகளுக்கமைய மன்றத்தின் பணிகளிலொன்றை நிறைவேற்றுவதற்கு ஏலவே கொழும்பு மாநகரத்தின் பணியாளர்களால் பயன்படுத்தப்படும் சீருடையை ஒத்த உடையைத் தெரிவு செய்தமை எவ்வாறு தவறாக அமையும்.

அத்துடன் அதையொத்த நிறத்திலான சீருடைகள் வேறு துறைகளிலும் பயன்படுத்தப்படுகின்றன. அதற்கப்பால் புலிகள் பயன்படுத்தினார்கள் என்பதற்காக அவ்வாறான நிற உடைகளைப் பயன்படுத்துவோர் பயங்கரவாதத்துக்குத் துணைபோவோர் என முடிவு செய்வது மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது போன்றதாகும்.



உண்மையில் முதல்வரின் கைது அரச அடக்குமுறையின் வெளிப்பாடு. பாசிசத்தின் மறுவடிவம். நாட்டின் வருங்கால ஆட்சி வடிவத்துக்கான ஓர் எதிர்வு கூறல். இனவாத்த்தை விதைத்து ஆட்சியைக்கைப்பற்றிய ஆட்சியாளர் சரிந்து போகும் தமக்கான மக்கள் செல்வாக்கை தூக்கிநிறுத்த எடுக்கும் தொடர் முயற்சிகளில் இதுவும் ஒன்று.

இது தனியே மணிவண்ணனுடன் நின்று விடப் போவதில்லை. எங்கள் ஒவ்வொருவருக்குமான எச்சரிக்கை. இதனை நாம் வன்மையாக்க் கண்டிப்பதுடன் உடனடியாக முதல்வரை விடுவிக்க வலியுறுத்துகிறோம். இதேவேளை, சரிந்து போகும் தமது செல்வாக்கை ஆட்சியாளர் தூக்கிநிறுத்தவதற்கு வாய்ப்புகளை வழங்காத வகையில் தமது பேச்சும் செயலும் அமைவதை எமதுமக்கள் பிரதிநிதிகள் உறு திப்படுத்திக் கொள்வது எம்மக்களுக்கும் அவர்களின் எதிர்கால அரசியலுக்கும் துணைசேர்க்கும். – என்றுள்ளது.

# பெறுகை அறிவித்தல்
# வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர்

01. தவிசாளர், பெறுகைக்குழு,வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர் அவர்களினால் தகுதி வாய்ந்த தனி நபர்கள் அல்லது ஒப்பந்த நிறுவனங்களிடம் இருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.
02. ஆர்வமுள்ள கேள்விதாரர் வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் தலைமையலுவலகத்தில் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன்மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் காலை **09.00** மணி முதல் பி.ப **6.00** மணிவரை **2021.04.12** ஆம் திகதியிலிருந்து **2021.04.20** ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
03. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை யாழ்ப்பாணம் – பருத்தித்துறை வீதி ,புத்தூர் எனும் முகவரியில் அமைந்துள்ள வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் **2021.04.12** தொடக்கம் **2021.04.20** ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப **9.00** மணி முதல் **14.00** மணி வரை மீளளிக்கப்படாத பணமாக ரூபா.1000/ (வற் தவிர்த்து)செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாக செலுத்தப்படல் வேண்டும்.
04. மீளளிக்கப்படும் வைப்புக்கட்டணம் பணமாக பிரதேச சபையில் செலுத்த வேண்டும். கட்டண விபரங்கள் கீழ்குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் உள்ளன.
05. கேள்வி ஆவணங்களினை இருபிரதிகளில் தயாரித்து **2021.04.20** ஆம் திகதி **14.30** மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், பிரதேசசபை பெறுகைக் குழு, வலிகாமம் கிழக்கு பிரதேசசபை,புத்தூர் எனும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப்பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் பெறுகைதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
06. 1ஆம், 2ஆம் இலக்க வேலைகள் பிரதேச சபைக்கு அதிக தொகையை வழங்கும் கேள்விதாரருக்கும் 2 ஆம் இலக்க வேலையானது பிரதேச சபையிடம் குறைந்த தொகையை கோரும் கேள்விதாரருக்கும் வழங்கப்படும்.
07. மேற்படி கேள்வி கோரல் தொடர்பில் வலி கிழக்கு பிரதேச சபையின் பெறுகை குழுவின் முடிவே இறுதியானது. பெறுகை குழுவின் முடிவு தொடர்பில் முறைப்பாடுகள் ஏதும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

| இல | வேலை விபரம் | ஒப்பந்த இல | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | ஒப்பந்த காலம் | மீளளிக்கப்படும் பிணை வைப்புப்பணம் | கேள்வி செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | அச்சுவேலி பொதுச் சந்தை புதிய கட்டடத்திற்கு பின்புறம் அமைந்துள்ள கட்டித்தின் கூரையை (மரங்கள் மற்றும் ஓடுகள்) அகற்றி எடுத்து செல்லல் (110X18) ft | NP/14/41(13)/2/ Council/ PI/D/01/2021 | 280,000.00 | 14 நாட்கள் | 30,000.00 | 14 நாட்கள் |
| 2. | அச்சுவேலி பொதுச் சந்தை புதிய கட்டித்திற்கு முன்புறம் அமைந்துள்ள கட்டடத்தை அகற்றி நிலத்தை தரைமட்டம் வரை மட்டப்படுத்தி கூரை மரங்கள், ஓடுகள் மற்றும் இடிபாடுகள் என்பவற்றை எடுத்து செல்லல் (42X28) ft | NP/14/41(13)/2/ Council/ PI/D/02/2021 | 95,000.00 | 14 நாட்கள் | 10,000.00 | 14 நாட்கள் |
| 3. | அச்சுவேலி பொதுச் சந்தை வளாகத்தில் அமைந்துள்ள பழவகை விற்பனை கொட்டகையை அகற்றி வலி கிழக்கு பிரதேசசபைதலைமைஅலுவலகத்தில் மீள நிர்மாணித்தல் (55X17) ft | NP/14/41(13)/2/ Council/ PI/D/03/2021 | | 14 நாட்கள் | 10,000.00 | 14 நாட்கள் |

**தியாகராஜா நிரோஷ்**
**தவிசாளர்.**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,**
**வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர்.**
**2021.04.09**

# அரசாங்கத்தை ஒருபோதும் பலவீனப்படுத்த முடியாது

போலியான குற்றச்சாட்டுக்களால் அரசாங்கத்தை ஒருபோதும் பலவீனப்படுத்த முடியாது. தேர்தல் காலத்தில் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் பல நிறைவேற்றப்பட்டுள்ளன. அரச நிர்வாகத்தில் ஒரு சில குறைபாடுகள் காணப்படுகின்றன. குறைபாடுகளைத் திருத்திக் கொண்டு நிர்வாகத்தை சிறந்த முறையில் முன்னெடுப்போம் என போக்குவரத்து துறை அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன காரியாலயத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்–

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் மீது நாட்டு மக்கள் நம்பிக்கை



கொண்டுள்ளார்கள். 2019 ஆம் ஆண்டு ஆட்சிய திகாரத்தைப்பொறுப்பேற்ற காலத்தில் இருந்து பல சவால்கள் ஏற்பட்டன. பூகோள மட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய கொவிட் – 19 வைரஸ் தாக்கம்தற்போது சிறந்த முறையில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தில் இருந்து நாட்டு மக்களைப் பாதுகாக்க ஆரம்பத்தில் இருந்து பொறுப்புடன் அரசு செயற்பட்டுள்ளது. பலம் வாய்ந்த நாடுகளால் கூட கட்டுப்படுத்த முடியாத வைரஸ் பரவலை அரசாங்கம் குறுகிய காலத்தில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. கொவிட் – 19 தடுப்பூசி பெருந்தொகையான மக்களுக்கு செலுத்தப்பட்டுள்ளன. தடுப்பூசி செலுத்தும் இரண்டாம் கட்ட நடவடிக்கை இம்மாதம் 23 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும்.

எதிர்க்கட்சியினர் பல பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அரசாங்கத்தை பலவீனப்படுத்த முயற்சிக்கிறார்கள். அரசாங்கத்தின் மீது நாட்டு மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளார்கள். தேர்தல் காலத்தில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளில் பலவற்றை குறுகிய காலத்தில் செயற்படுத்தியுள்ளோம். சுபீட்சமான எதிர்கால கொள்கைத் திட்டத்தை உள்ளடக்கத்தை 2023 ஆம் ஆண்டுக்குள் முழுமையாக செயற்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

அரச நிர்வாகத்தில் ஒரு சில குறைபாடுகள் காணப்படுகின்றன. குறைபாடுகளை நாட்டு மக்கள் சுட்டிக் காட்டியுள்ளார்கள். அவற்றை திருத்திக் கொண்டு அரச நிர்வாகத்தை சிறந்த முறையில் முன்னெடுப்பது அவசியமாகும். இடம்பெறவுள்ள மாகாண சபை தேர்தலில் கூட்டணியாக ஒன்றிணைந்து போட்டியிட எதிர்பார்த்துள்ளோம். கூட்டணிக்குள் ஒரு சில கருத்து முரண்பாடுகள் காணப்படுகின்றன. பேச்சு ஊடாக முரண்பாடுகளுக்கு தீர்வு எட்டப்படும். – என்றார்.

# சீட்டி எனப்படுகின்ற பாதாள உலகக்குழு உறுப்பினர் கைது



முல்லேரியா பகுதியில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் முன்னெடுத்த சோதனையின் போது பாதாள உலக குழு நபரான ‘சீட்டி’ எனப்படும் சரத்குமார என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சீட்டி, அவரது வீட்டில் நிலத்தடியில் அமைக்கப்பட்ட ஒரு பதுங்கு குழியில் பதுங்கியிருந்த சமயத்தில் நேற்று வெள்ளிக்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த நவம்பர் மாதம் வெலிகம பகுதியில் 112 கிலோ கிராம் ஹெரோயின் மீட்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய ஒன்பதாவது சந்தேக நபர் இவர் என பொலிஸார் அடையாளப்படுத்தியுள்ளனர்.

அங்கொட லொக்காவுடன் தொடர்பிலிருந்ததாகக் கூறப்படும் இவர், நாட்டின் பல்வேறு பகுதிகளில் மறைந்திருந்த சந்தர்ப்பத்தில் அவரை கைதுசெய்ய பொலிஸாரும், விசேட அதிரடைப் படையினரும் தொடர்ந்தும் சோதனை நடவடிக்கையை முன்னெடுத்து வந்தனர்.

இந் நிலையில் அவர் வீடு திரும்பியுள்ளார் என கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைவாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் முன்னெடுத்த சோதனையின்போதே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## முஸ்லிம்களின் முடிவு என்ன?

ராஜபக்ஷக்களின் அரசு மீளவும் அதிகாரத்துக்கு – ஆட்சிப் பீடத் துக்கு – வந்த பின்னர்தான் பௌத்த – சிங்கள பேரினவாதத்தின் உண்மையான சொரூபத்தை சிறுபான்மையினர் – குறிப்பாக முஸ்லிம்கள் – தரிசிக்கத் தொடங்கியிருக்கின்றார்கள்.

ஆனால், மற்றைய சிறுபான்மையினரான தமிழர்களைப் பொறுத்தவரை அப்படியல்ல.

இலங்கை பிரிட்டனிடமிருந்து – வெள்ளையரிடமிருந்து – சுதந்திரம் பெற்றதாகக் கூறப்படும் காலம் தொட்டே, இலங்கை நாடாளுமன்றத்தில் பௌத்த – சிங்களப் பேரினவாதமே கோலோச்சுகின்றது. சிறுபான்மையினரை அடக்கும் பேரினவாதச் சட்டங்களே அங்கே யாக்கப்பட்டன.

இந்த நாட்டிலிருந்து வெள்ளையர்கள் வெளியேறிய போது – பெரும்பான்மையினர் என்ற முறையில் ஆட்சி அதிகாரம் சிங்கள, பௌத்த பேரினவாதிகளிடம் வீழ்ந்த போது – பேரினவாதத்தின் கொடூரத்துக்கு இலக்காகி முதலில் வீழ்ந்தவர்கள் நமது மலையகத் தமிழ்ச் சகோதரர்கள்தாம்.

இந்த இலங்கைத்தீவை தேயிலை, இறப்பர் தோட்டத் தொழில் ஏற்றுமதிகள் மூலம் பொருளாதார வளம் மிக்க தேசமாக உயர்த்துவதற்கு தமது உடலையும், கடும் உழைப்பையும் உரமாக இட்ட பத்து லட்சம் மலையக சகோதரர்களை நாடற்றவர்களாக்கி நட்டாற்றில் விட்டது சிங்களம்.

வெள்ளையனிடமிருந்து அதிகாரத்தைப் பெற்ற ஓரிரண்டு ஆண்டுகளுக்கு உள்ளேயே இந்தக் கொடூரம் அரங்கேறியது.

மலையக தமிழ் சமூகத்தை நிரந்தர வறுமைக்குள்ளும் பிணிக்குள்ளும் மிடிக்குள்ளும் ஆழ்த்திய கேவலம் கெட்ட இந்த வேலையைச் செய்த பௌத்த – சிங்களப் பேரினவெறிப் பூதம் பின்னர் தனது கைவரிசையை அடுத்த சிறுபான்மையினரான வடக்கு, கிழக்குத் தமிழர்கள் பக்கம் திருப்பியது. அடுத்த ஆறு தசாப்த காலமாக ஈவிரக்கமற்ற அந்தக் கொடூரம் பெரும் அடக்கு முறையாகக் கட்டவிழ்ந்தது.

வடக்கிலும், கிழக்கிலும் தனியான மொழி, பண்பாடு, வழக்காறு, வாழ்க்கை முறை ஆகியவற்றுடன் தனி இனக்குழுவாகப் பரந்து பட்டு வாழ்ந்த தமிழர்களின் தேசத்தை சிதைத்தழிக்கும் தனது அடக்கு முறைக் கைங்கரியத்தை அது பெருத்த எடுப்பில் முன்னெடுத்தது.

தமிழர்கள் தனித் தேசிய இனமாகத் தமது தாயகத்தில் நிலைகொண்டிருப்பதற்கு அடிப்படையாக அமைந்த ஒவ்வொரு அத்திவாரத்தையும் தேடிச் சிதைத்தழிப்பதில் பேரினவாதம் தீவிர முனைப்புக் கொண்டிருந்தது.

தமிழர்களை ஒரு தேசமாக இணைக்கும் அவர்களது மொழி உரிமை, தாயகம் மீதான தனியுரிமை, கல்வியுரிமை, வேலை வாய்ப்பு உரிமை என்று தொடங்கி கடைசியில் அவர்கள் வாழ்வுரிமை வரை எல்லாவற்றிலும் கைவைத்தது ஆட்சிப் பூதம். ஒவ்வொரு அடிப்படை மீதும் இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்தப்பட்டது.

தனிச் சிங்களச் சட்டம் மூலம் தமிழின் – தமிழினத்தின் – இருப்பே கேள்விக்குள்ளாக்கப்பட்டது. திட்டமிடப்பட்ட – பெருத்த எடுப்பிலான – அரச சார்பில் முன்னெடுக்கப்படுகின்ற – சிங்களக் குடியேற்றங்கள், இராணுவ அத்துமீறல்கள் மூலம் தமிழர் தேசம் ஆக்கிரமிக்கப்பட்டது; தொடர்ந்து ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றது.

இந்த அடக்குமுறைகளுக்கு எதிராகத் தமதும், தமது இனத்தினதும் இருப்புக்காக ஆயுத வழி கொண்டு போராடிய தமிழர் தரப்பின் போராட்டத்தை உலக நாடுகளின் உதவியோடு வெற்றிகரமாக அடக்கி ஒடுக்கி, நசுக்கியது சிங்கள அரசு.

இவ்வளவும் நடந்தேறும் வரை – தமிழர் தரப்பை முற்றாக அடக்கி, ஒடுக்கும் வரை மூன்றாவது சிறுபான்மை இனமான முஸ்லிம்களை தமது பகடைக் காய்களாகப் பயன்படுத்தியது பேரினவாதம்.

இப்போது முறைமை முஸ்லிம்களுக்குரியது. பேரினவாதத்தின் அடக்குமுறை அடாவடி முஸ்லிம்கள் பக்கம் திரும்பியிருக்கின்றது. பேரினவாதத்தின் சீற்றத் தகிப்பைத் தாங்க முடியாது தடுமாறி நிற்கின்றது முஸ்லிம் இனம். வரலாற்றில் இப்போது தான் பேரினவாதத்தின் கொடூர முகத்தை முஸ்லிம் மக்கள் எதிர்கொண்டு நிற்கின்றார்கள்.

இனி, என்ன செய்யப் போகின்றார்கள் முஸ்லிம் மக்கள்? முஸ்லிம் தலைவர்கள்?

தாம் வர்த்தக வம்சாவளியினர் என்ற அடிப்படையில், அன்றைய அரசியலில் லாபம் எது எனக் கணக்கிட்டு 'ஆயாராம், காயாராம்' அரசியல் செய்யப் போகின்றார்களா? அல்லது அடக்கப்படுகின்ற மற்றைய சிறுபான்மையினருடன் கைகோர்த்து, பேரினவாதத்துக்கு முகம் கொடுக்க ஒன்றுபட்டு நிற்கப் போகின்றார்களா?

கிழக்கு மாகாணத்தில் தமிழர் தரப்பு தானாக முன்வந்து, நிபந்தனையற்ற முறையில் முதலமைச்சர் பதவிக்கு ஆதரவு தந்த போது, அதை உதாசீனப்படுத்தி, புறக்கணித்து விட்டு, சிங்களத்தின் காலில் வீழ்ந்து, முதலமைச்சர் பதவியை பிச்சையாகப் பெற்றவர்கள் முஸ்லிம் தலைவர்கள்.

அவர்கள் தீர்க்கமான முடிவு ஒன்றை எடுக்க வேண்டிய காலம் வந்து விட்டது. அதைக் கவனத்தில் எடுத்து தமிழர்களும் தீர்மானங்களை எடுக்க வேண்டிய வேளை நெருங்கி விட்டதாகவே தோன்றுகின்றது.

## சஜித் சுய மரியாதையைப் பாதுகாக்க ரஞ்சன் விடயத்தை மறந்து விடவேண்டும்

### எஸ். பி. திஸாநாயக்க தெரிவிப்பு



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க சர்வதேச நீதிமன்றத்தை நாடுவது பயனற்றது.

அவர் நீதிமன்றத்தை அவமதித்தமை பல்வேறு சாட்சியங்கள் ஊடாக உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

ஆகவே எதிர்க்கட்சித் தலைவர் தனது சுயமரியாதையைப் பாதுகாத்துக் கொள்ள ரஞ்சன் ராமநாயக்கவின் நாடாளுமன்ற உறுப்புரிமை விவகாரத்தை இனியாவது மறந்து விட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக் கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் நாடாளுமன்ற உறுப்புரிமையைப் பாதுகாக்க எதிர்க்கட்சியினர் பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்தனர்.

நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டே சபாநாயகர் ரஞ்சன் ராமநாயக்கவின் நாடாளுமன்ற உறுப்புரிமை ரத்தாகும் என அறிவித்தார்.

இந்த விடயத்தைக் கொண்டு எதிர்க்கட்சியினர் நாடாளுமன்றில் அசாதாரண சூழ்நிலையை ஏற்படுத்துகிறார்கள்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க சிறை சென்றுள்ளமைக்கும், அரசாங்கத்துக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. இவருக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனையை அரசியல் பழிவாங்கல் எனக் கூறுகின்றமையை எதிர்த் தரப்பினர் தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

நல்லாட்சி அரசாங்கத்தின் போது அரச அதிகாரத்தை பயன்படுத்தி நீதிமன்ற செயற்பாடுகளில் இவர் அநாவசியமான முறையில் தலையிட்டுள்ளார்.

நீதிபதிகளை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்டமையால் தற்போது தண்டிக்கப்பட்டுள்ளார். செய்த தவறை திருத்திக் கொள்ள அவர் எவ்வித முயற்சிகளையும் முன்னெடுக்கவில்லை.

இவரது முறையற்ற செயற்பாடுகளை நல்லாட்சி அரசாங்கத்தில் ஒரு தரப்பினர் குறுகிய தேவைக்காக பயன்படுத்திக் கொண்டார்கள்.

நாடாளுமன்ற உறுப்புரிமை பறிபோனதற்கு நீதியை பெற்றுக்கொள்ள சர்வதேச நீதிமன்றத்தை நாடுவதாக எதிர்ர்தரப்பினர் கூறுகின்றனர்.

இந்த விடயத்திற்கு சர்வதேச நீதிமன்றம் செல்வது என்று குறிப்பிடுவது எதிர்த் தரப்பினரது இழிவான நிலையை எடுத்துக்காட்டுகிறது. நீதித்துறையை அவமதிப்பதை சர்வதேச நீதிமன்றம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது.

எதிர்க்கட்சித் தலைவர் தனது சுய மரியாதையை பாதுகாத்துக்கொள்ள ரஞ்சன் ராமநாயக்கவின் நாடாளுமன்ற உறுப்புரிமை விவகாரம் தொடர்பில் கவனம் செலுத்துவதைக் கைவிட வேண்டும்.

நீதிமன்றத்தை ரஞ்சன் ராமநாயக்க அவமதித்தமை பல்வேறு சாட்சியங்கள் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. – என்றார்.

## இரத்ததான முகாம்

*யாழ்ப்பாணம், ஏப்.10*

*யாழ். போதனா வைத்தியசாலையில் இரத்த வங்கியின் குருதித் தேவையை நிவர்த்தி செய்வதற்காக கிறீன் பீல்ட் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் நாளை 11.04.2021 காலை 9 மணி முதல் 1.00 மணி வரை யாழ் கிறீன் பீல்ட் மண்டபத்தில் இரத்ததான முகாம் நடைபெறவுள்ளது. எனவே அன்றைய தினம் உதிரம் கொடுத்து உயிர்காக்க வாரீர்.*

## ஆணைக்குழு விசாரணைக்கு கூட அழைக்கப்படாத நௌபர் மௌலவி எவ்வாறு பிரதான சூத்திரதாரி?

### வஜிர அபேவர்தன கேள்வி

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவிற்குக் கூட அழைக்கப்படாத நௌபர் மௌலவி திடீரென எவ்வாறு உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரியானார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன கேள்வியெழுப்பினார்.

நௌபர் மௌலவியை உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரியாக அறிவிப்பதற்கு ஏதுவாக அமைந்த காரணிகள் எவை என்பது தொடர்பிலும் அரசாங்கம் நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என்றும் வஜிர அபேவர்தன வலியுறுத்தினார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரி நௌபர் மௌலவி என அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடும் போதே வஜிர அபேவர்தன இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்ற அன்றைய தினம் இரவு நல்லாட்சி அரசாங்கத்தால் நௌபர் மொளலவி கைதுசெய்யப்பட்டார். இந்த சந்தேகநபர் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெறுவதற்கு சில தினங்களுக்கு முன்னர் சஹ்ரானுடன் ஏற்பட்ட முரண்பாடுகளின் காரணமாக அவரிடமிருந்து விலகியமையும் விசாரணைகளின் மூலம் தெரியவந்தது.



உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை முன்னெடுக்க விருப்பமின்மையை வெளிப்படுத்தி சஹ்ரானிடமிருந்து விலகிய நௌபர் மௌலவி , பிரதான சூத்திரதாரி என்றால் அவர் நிச்சயம் உயிர்த்த ஞாயிறு ஜனாதிபதி விசாரணைஆணைக்குழுவிற்குஅழைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டிருக்க வேண்டும். எனினும் யாருடைய அழுத்தத்தின் காரணமாக இதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படவில்லை என்பதை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும்.

வெளிநாடுகளிலுள்ள நபர்கள் மற்றும் வெளிநாட்டு புலனாய்வுப்பிரிவு தொடர்பில் ஆராயுமாறு உயிர்த்த ஞாயிறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், நௌபர் மௌலவியை உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரியாக அறிவிப்பதற்கு ஏதுவாக அமைந்த காரணிகள் எவை என்பது தொடர்பிலும் அரசாங்கம் நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். – என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரியைக் கைது செய்வது அரசுக்குப் பாரிய சிக்கல் நிலை

## ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு



ஏப்ரல் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியை மறைப்பதற்கே நௌபர் மௌலவியை முன்னிலைப்படுத்தி இருக்கின்றனர்.

அத்துடன், முஹமட் நௌபர் தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையிலோ அமெரிக்காவின் எப்.பி.ஐ. அறிக்கையிலோ அவருக்கு எதிராக பாரிய குற்றச்சாட்டு தெரிவிக்கப்படவில்லை என எதிர்க்கட்சி உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஏப்ரல் தாக்குதல் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை மீதான ஐந்தாவது நாள் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்தும் தெரிவிக்கையில் –

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணை அறிக்கையில் புதிய விடயங்கள் என எவையும் இல்லை.

தாக்குதல் தொடர்பாக நாட்டில் அனைவரும் அறிந்த விடயங்களே விசாரணை அறிக்கையிலும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன என்ற கருத்து அனைவராலும் தெரிவிக்கப்பட்டுவருகின்றது.

குறிப்பாகத் தாக்குதல் இடம்பெற்று இன்னும் ஒரு வாரத்தில் இரண்டு வருடங்கள் நிறைவடைகின்றன.

அதனால் இந்தத் தாக்குதல் தொடர்பாக திருப்தியளிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்காவிட்டால் சர்வதேசத்துக்கு முறையிடுவதாகவும் வீதிக்கிறங்குவதாகவும் கர்தினால் மல்கம் ரஞ்சித் உட்பட கத்தோலிக்க சபை அறிவித்திருக்கின்றது.

மேலும் முன்னாள் ஜனாதிபதிக்கு எதிராக சட்டத்தை நிலைநாட்டுமாறு கர்தினால் மெல்கம் ரஞ்சித் மிகவும் அழுத்தமாக அரசாங்கத்துக்கு தெரிவித்திருக்கின்றார்.

மல்கம் ரஞ்சித்தின் இந்தக் கோரிக்கை தொடர்பாக என்ன செய்வதென்று அரசாங்கம் சிந்தித்து வருகின்றது.

மைத்திரிபால சிறிசேனவை எப்படி கைதுசெய்வது, அவரை எப்படி சிறையிலடைப்பதென்பது அரசாங்கத்துக்கு பாரிய சிக்கலாகும். இவ்வாறான நிலையில் இந்தச் சம்பவத்தை எப்படி மறைப்பதென்று அரசாங்கம் சிந்தித்து வருகின்றது.

அத்துடன் ஐ.எஸ்.ஐ.எஸ்.க்கு ஆதரவளித்ததாகத் தெரிவித்து, ஏப்ரல் தாக்குதலை அடிப்படையாகக்கொண்டு அமெரிக்க நீதித்துறை, இலங்கையர்கள் 3 பேருக்கு எதிராகக் கடந்த ஜனவரி மாதம் வழக்குத் தொடுத்திருந்தது.

அவர்கள் தான் முஹமட் நௌபர். முஹமட் அன்வர் ரிஸ்கான், அஹமட் மில்ஹான், ஹயாத்து முஹம்மத் இதுதொடர்பாக விசாரணை மேற்கொண்டிருந்த அமெரிக்காவின் எப்.பி.ஐ. தனது அறிக்கையை வெளியிட்டிருக்கின்றது.

அந்த அறிக்கையில் நௌபர் என்பவர் இலங்கையில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் இரண்டாவது நபராக இருந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அவருக்கு எதிராகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டு தான், அந்த அமைப்பின் பிரசாரத்துக்குப் பொறுப்பாக இருந்தவர், ஆள்களை இணைத்துக்கொண்டவர், ஆயுத பயிற்சி வழங்கியவர் என்பவையாகும்.

ஆனால், முஹமட் நௌபர் என்பவர் இந்த தாக்குதலின் பிரதான சூத்திரதாரி என அந்த அறிக்கையில் எங்கும் தெரிவிக்கப்படவில்லை.

ஆனால் நௌபர் மௌலவி என்பவரை ஏப்ரல் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியாக இனம் கண்டுள்ளதாக பொலிஸுக்கு பொறுப்பான அமைச்சர் சரத்பொன்சேகா தெரிவித்திருக்கின்றார்.

நௌபர் மௌலவி தொடர்பாக அமெரிக்காவின் எப்.பி.ஐ. அறிக்கையிலோ எமது ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையிலோ அவ்வாறான அறிப்பு இல்லாத நிலையில், அரசாங்கம் திடீரென நௌபர் மௌலவி என்பவரை பிரதான சூத்திரதாரியாக பெயரிடுவது, இந்த தாக்குதலின் பிரதான சூத்திரதாரியை மறைப்பதற்கான சதியா என்ற சந்தேகம் எழுகின்றது.

அதேபோன்று தாக்குதலின் அடுத்த சந்தேக நபரான சாரா புலஸ்தி உயிருடன் இருக்கின்றாரா? இல்லையா? என தனக்குத் தெரியாது என அமைச்சர் சரத் வீரசேகர தெரிவிக்கின்றார்.

ஆனால், ஆணைக்குழுவுக்கு சாட்சியமளித்த சஹ்ரானின் மனைவி, சாய்ந்தமருதில் தாக்குதல் இடம்பெற்ற இடத்தில் சாராவின் குரலைக் கேட்டதாகத் தெரிவித்திருக்கின்றார்.

சஹ்ரானின் அனைத்து விடயங்களுக்கும் சாரா சம்பந்தப்பட்டிருப்பதாகவும் ஹாதியா தெரிவித்திருக்கின்றார். அப்படியாயின் ஏன் சாராவை தேடுவதற்கு அரசாங்கம் முயற்சிக்காமல் இருக்கின்றது.

எனவே, ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியமளித்த அதிகமானவர்களின் சாட்சியங்களைப் பார்க்கும்போது இந்த தாக்குதலுக்கும் அரசாங்கத்துக்கும் ஏதாவது ஒருவகையில் சம்பந்தம் இருக்கவேண்டும். அதேபோன்று நௌபர் மௌலவியை இந்த தாக்குதலின் பிரதான சூத்திரதாரியாகக் காண்பித்து உண்மையான சூத்திர தாரியை மறைப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது. – என்றார்.

# தோட்டத் தொழிலாளர்களை அரசுக்கெதிராக இறக்குவோம்

## இராதாகிருஷ்ணன் எச்சரிக்கை

ஆயிரம் ரூபா அடிப்படைச் சம்பளத்தை பெற்றுக் கொடுப்பதாகக் கூறிவிட்டு எமது தோட்டத்தொழிலாளர்களை நசுக்கும் செயற்பாட்டை அரசாங்கமும், தோட்டக் கம்பனிகளும் முன்னெடுத்து வருகின்றன.

இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக சகல தோட்டத் தொழிலாளர்களையும் களத்தில் இறக்கி போராட்டம் நடத்தத் தயாராக உள்ளோம் என எதிர்க்கட்சி உறுப்பினர் வி. இராதாகிருஷ்ணன் சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை, ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கை மீதான ஐந்தாம் நாள் விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைக் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

மலையக மக்களுக்கு ஆயிரம் ரூபா அடிப்படைச் சம்பளம் கொடுப்பதாகக் கூறிவிட்டு மலையக மக்களைப் பாதாள படுகுழியில் தள்ளிவிடும் சூழல் இன்று உருவாகியுள்ளது.



சம்பள நிர்ணய சபையில் 900 ரூபா பிளஸ்நூறுரூபாஎன்ற அடிப்படையில் ஆயிரம் ரூபா வழங்கப்படும் எனக்கூறி சம்பளத்தைகொடுப்பதுடன் கம்பனிகள் பல்வேறு அட்டூழியங்களையும், அநியாயங்களையும் மலையகத்திச் செய்வதை பார்க்கின்றோம்.

இந்த மாதம் சம்பளத்தை பெற்றுக்கொள்ள மக்கள் செல்லும்போது, அவர்கள் கூறும் முக்கியமான விடயம் என்னவென்றால், மேலதிகமாக எடுக்கும் கொழுந்துக்கு பணம் கொடுக்க முடியாது எனவும் 20 கிலோ கொழுந்து பறித்துக்கொடுக்க வேண்டுமெனவும், ஆண், பெண் சகலரும் கொழுந்து எடுக்க வேண்டும் என்ற பல்வேறு நிபந்தனைகளைக் கம்பனிகள் முன்வைத்து பல்வேறு இடங்களில் எமது மக்களுக்கு அநியாயங்கள் இடம்பெற்று வருகின்றன எனக் கூறுகின்றனர். எனவே இதுவொரு யுத்த களமாக மாறியுள்ளது.

தமிழ் சிங்கள புத்தாண்டுக்குப் பின்னர் மலையகத்தில் போராட்டம் நடப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளன என நான் கருதுகின்றேன்.

ஏனெனில் ஆயிரம் ரூபா சம்பளம் தருவதாகக் கூறிவிட்டு அதற்காக மக்களை நசுக்குவதும், மக்களை பழிவாங்குவதாக இருக்கின்ற இந்தத் தோட்டக் கம்பனிகளுக்கு ஒரு பாடம் புகட்ட வேண்டிய கட்டாயம் இப்போது எமக்கு இருக்கின்றது.

ஆகவே, தோட்டக் கம்பனிகள் மற்றும் அரசாங்கம் எதிர்வரும் காலங்களில் இவ்வாறு நடந்துகொண்டால் இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக நாங்கள் சகல தோட்டத் தொழிலாளர்களையும் களத்தில் இறக்கிப் போராட்டம் நடத்தத் தயாராக உள்ளோம் என்பதையும் இந்த சபையில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.– என்றார்.

# வெலிக்கடை சிறைச்சாலை முன்னால் ஆர்ப்பாட்டம்






வெலிக்கடை சிறைச்சாலைக்கு முன்னால் கடந்த வியாழக்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த ஆர்ப்பாட்டம் மஹர சிறைச்சாலையில் கைதிகளின் உயிரிழப்புக்கு காரணமான நபர்களைக் கைது செய்யுமாறு கோரி சிறைக்கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

# ஜெனிவா நெருக்கடியை சந்திக்கும் முதல் சந்தர்ப்பம் எமக்கு இதுவல்ல

## தினேஷ் குணவர்தன இறுமாப்பு



ஜெனிவா நெருக்கடிகளை எமது அரசாங்கம் சந்திக்கும் முதல் சந்தர்ப்பம் இதுவல்ல. ஆனால் ஜெனிவா விவகாரங்களைக் கையாள எமது தூதரகம் மிகச்சரியான வேலைத்திட்டத்தைக் கையாண்டதென வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை, வாய்மூல கேள்விக்கான விடைகள் நேரத்தில் ஜெனிவா விவகாரம் தொடர்பாக எதிர்க்கட்சி உறுப்பினர் சமிந்த விஜயசிறி வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தனவிடம் கேள்வி எழுப்பினார்.

ஜெனிவா நெருக்கடியை கையாள்வதில் எமது அரசாங்கம் பலவீனமடைந்திருக்க முடியும், நீங்கள் அதைத்தான் கூறப்போகின்றீர்கள், ஆனால் உங்களின் அரசாங்கமும், அரச அதிகாரிகளும் பலவீனப்பட்டுள்ள காரணத்தால் தான் இம்முறை ஜெனிவாவில் 46/1 பிரேரணையில் தோல்வியைக் கண்டுள்ளது. இதனை ஏற்றுக்கொள்கின்றீர்களா எனக் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதில் தெரிவித்த வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன –

ஜெனிவா விடயங்களைக் கையாள்வதில் எமது நட்பு நாடுகள் மற்றும் எம்முடன் நெருக்கமாக செயற்படும் நாடுகளிடம் எமது தரப்புக் காரணிகளை முன்வைத்தோம். அதேபோல் ஜெனிவா நெருக்கடிகளை எமது அரசாங்கம் சந்திக்கும் முதல் சந்தர்ப்பம் இதுவல்ல. எவ்வாறு இருப்பினும் எமது தூதுக்குழு, தூதரகம் இந்த விடயத்தில் செய்ய வேண்டிய உயரிய சேவையைச் செய்துள்ளது.

கொழும்பில் உள்ள வெளிவிவகார அமைச்சுடன் இணைந்தும், தனித்தும் எமது தூதரகம் கடமையாற்றி நாட்டுக்காகச் செயற்பட்டுள்ளது. எவ்வாறு இருப்பினும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சகல கொள்கைக்கு எதிராகவும் குற்றம் சுமத்துகின்றனர். இப்போது வெளிநாட்டுத் தூதுவர்களை நியமிப்பது தொடர்பான நடவடிக்கைகளிலும் குற்றம் சுமத்துகின்றனர். – என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

**'கம்பவாரிதி' இலங்கை ஜெயராஜ் தமது 'உகரம்' இணையத்தளத்தில் 'பாட்டும் நானே! பாவமும் நானே!' என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி 'காலைக்கதிர்' நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்கு தீனியாகிறது.**



# பாட்டும் நானே? பாவமும் நானே!

**1. கேள்வி:-** வரவர உங்கள் பதில்கள் நீநீநீநீநீ நீளமாய்ப் போவது ஏன்?

**பதில்:-** வரவர உங்கள் கேள்விகள் ஆஆஆஆஆ ஆழமாய்ப் போவதால்.....!

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ ஆஆஆஆஆ ....வ் (இது கொட்டாவி)**

* * * * *

**2.கேள்வி:-** புற்றுநோயை வருவிக்கத்தக்க நஞ்சுப்பொருள் தேங்காயெண்ணெயில் கலந்திருக்கிறதாமே?

**பதில்:-** அந்த அநியாயத்தை ஏன் கேட்கிறீர்கள்? முகநூல்க்காரர்கள் ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு பொருளை விஷம் என்று சொல்லி வேறு வெருட்டியபடி இருக்கிறார்கள். அதுபோதாதென்று இது வேறு. நம் எதிர்காலத்தை நினைக்கப் பயமாகவிருக்கிறது. உணவில், நஞ்சில்லாதது எது? எனத் தெரியவில்லை. பாலைக் குடித்து வாழலாம் என்றால் பால்மாவும் நஞ்சென்கிறார்கள். பச்சைத் தண்ணீரையாவது குடிக்கலாமா? என்றால், சில ஊர்களில் தண்ணீராலேயே பலபேருக்குக் 'கிட்னி' பழுதாகிவிட்டதாம். காற்றையாவது சுவாசித்து வாழலாமோ? என்றால், வளியிலும் மாசு அதிகரித்து விட்டதாய் ஆய்வுகள் சொல்கின்றன. சுத்தமாய் எஞ்சி இருப்பது நெருப்பு மட்டும்தான். அதைத் தின்ன தீக்கோழியாக அல்லவா பிறக்கவேண்டும். (உண்மையிலேயே தீக்கோழி தீயைத் தின்னுமா?) இந்த இலட்சணத்தில் தேங்காயெண்ணெயில் நஞ்சு கலந்தால் என்ன? கலக்காமல் விட்டால் என்ன?

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ 'என்னதான் நடக்கும் நடக்கட்டுமே!'**

* * * * *

**3. கேள்வி:-** முன்பு இவ் அரசைக் கடுமையாய் ஆதரித்த மகாநாயக்க தேரர்களெல்லாம் இப்போது அரசுக்கு எதிராய்த் திரும்புமாப் போல் தெரிகிறதே?

**பதில்:-** சீனத் தொடர்பில் அரசு காட்டும் அதீத அக்கறை அவர்களையும் பயமுறுத்துகிறது என்று நினைக்கிறேன். 'சீனத்துணிவால்' ஒருவேளை இராணுவ ஆட்சி இங்கும் அமைந்து போனால் காலாகாலமாக இலங்கையில் 'நிழல்' அரசாங்கம் நடத்தி வரும் தமது கதி என்னாகும் என்று யோசிக்கத் தொடங்கியிருக்கிறார்கள் போல. முன்பு அரசை எதிர்த்த மாணவர்களை இரத்தவெறியோடு சீனா கையாண்ட விதத்தை யார்தான் மறக்கப் போகிறார்கள்?

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ அவனைத் தொடுவான் ஏன்? கவலைப்படுவான் ஏன்?**

* * * * *

**4. கேள்வி:-** பேராயர், கர்தினால் மல்கம் ரஞ்சித் அவர்கள், ஏப்ரல் 21 தாக்குதல் பற்றி முன்னாள் ஜனாதிபதி மைத்திரியை நேரடியாகக் குற்றஞ்சாட்டி உள்ளதோடு 'வரும் தேர்தலில் போட்டியிட உள்ளதாக ஆடை அணிந்துகொண்டுதான் அவர் கூறுகிறாரா?' போன்ற கடும்வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்தியிருக்கிறாரே. பார்த்தீர்களா? அதுமட்டுமல்லாமல்



காலக்கெடு விதித்து வீதியில் இறங்கப் போவதாக அரசுக்கு எச்சரிக்கை வேறு விடுத்திருக்கிறார். அவரது துணிவு பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:-** இதில் சில விடயங்களைக் கவனிக்க வேண்டியிருக்கிறது.

பேராயரின் துணிவு அவரது ஆத்மபலத்தால் வந்ததல்ல. 'வத்திக்கானின்' உலகபலத்தால் வந்தது.

நீதிமன்றத்தில் குற்றம் நிரூபிக்கப்படுவதற்கு முன்னால் மைத்திரி பற்றிய அவரது கண்டனத்தில் நியாயம் இருப்பதாய்த் தெரியவில்லை.

நிர்வாணமாய் வாக்குக் கேட்கப் போவாரா? என்ற குறிப்போடு சொல்லப்பட்ட அவரது கேள்வியில், ஒரு துறவிக்குரிய கண்ணியத்தன்மை 'மிஸ்ஸிங்' இவ்வளவு கடுமையான வார்த்தைகளை அவர் பேசியும் அரசு 'பம்மிக்' கொண்டிருப்பது பல ஐயங்களையும் கிளப்புகிறது.

இத்தகைய கடும்வார்த்தைகளை ஒரு இந்து மதத்தலைவரோ, இஸ்லாமிய மதத்தலைவரோ பேசியிருந்தால் பேரினவாதிகள் என்னவெல்லாம் செய்திருப்பார்கள்?

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ பூணூல் அறுந்திருக்கும். தொப்பி கழண்டிருக்கும். எல்லா வீரமும் செல்லுமிடத்தில்தான் போல.ஹி...ஹி...**

* * * * *

**5. கேள்வி:-** வாரத்தில் குறித்த சிலநாள்களுக்கு கட்டணம் பெற்று இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுமதிக்கப் போகிறார்களாமே? மீனவர் பிரச்சினைக்கு இதுதான் தீர்வா?

**பதில் :-** நிச்சயம் இது தீர்வில்லை! பிராந்திய வல்லரசு திரைக்குப்பின்னால் மிரட்டுகிறதோ! யார் அறிவார்? அங்ஙனமாயின் அரசுக்கும் வேறுவழியில்லை என்பது போக, அவர்களுக்கு வடக்கின் நஷ்டத்தில் உள்ளூர ஒரு மகிழ்வு இருக்குமாப் போலவும் தெரிகிறது. அதுமட்டுமல்லாமல் அங்கும் இங்கும் உள்ள தமிழினத்தாரை மோதவிட்டு 'மித்திரபேதம்' செய்ய அவர்களுக்குக் கிடைத்திருக்கும் வாய்ப்பைத் தக்கபடி பயன்படுத்தப் பார்க்கிறார்கள்போல. இந்தத் தீர்வை நீதியாக்கவேண்டுமானால் ஒன்று செய்யலாம். அவர்களுக்கு இங்கு அனுமதி வழங்கப்படுவது போல, எமது மீனவர்களுக்கும் அவர்களது கடல் எல்லைக்குள் சென்று மீன்பிடிக்க அனுமதி வழங்கவேண்டும். டக்ளஸ் முயற்சிப்பாரா?

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ 'வல்லான் வகுத்ததே வழி'**

* * * * *

**6. கேள்வி: -** எமது தொலைக்காட்சிச் செய்திகளைப் பார்ப்பதுண்டா?

**பதில் :-** பார்க்கிறேன். எமது இளைய அறிவிப்பாளர்களின் சுத்தமான தமிழ் உச்சரிப்பு மகிழ்வு தருகிறது. தமிழ்நாட்டுத் தொலைக்காட்சிகளில் செய்தி வாசிப்பில் கூட உச்சரிப்புப் பற்றிக் கவலைப்படுகிறார்கள் இல்லை. 'பெய்த மழையால் சென்னைக்குள் வெல்லம் புகுந்தது' என்று கூச்சம் இல்லாமல் வாசிக்கிறார்கள். 'வெல்லம் புகுந்தால் நல்லது தானே' என்று சொல்லத் தோன்றுகிறது. இப்படி இன்னும் பல தமிழ்க்கொலைகள் அங்கு. எங்கள் செய்தி வாசிப்பாளர்களும்கூட ஒரு தவறைத் தொடர்ந்து செய்கிறார்கள். செய்திகளின் இடையிடையே 'எது எவ்வாறாயினும்' என்ற ஒரு தொடரை, ஏனென்று தெரியாமல் அவர்கள் காரணமின்றிப் பாவிப்பது சலிப்புத் தருகிறது. இப் பிழையைத் திருத்த ஒரு வழி இருக்கிறது. வாசிக்கும் செய்தியிலிருந்து இந்தத் தொடரை நீக்கிவிட்டுப் பார்த்தார்களானால் அதன் தேவை இருக்கிறதா? இல்லையா? என்று தெரிந்து கொள்ளலாம். பயன் இல்லாத சொற்களை எதற்குப் பாவிக்கவேண்டும்? பயனில சொல்லுதலை வார்த்தைக் குற்றங்களில் ஒன்றாய் உரைக்கிறார் வள்ளுவர்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ 'எது எவ்வாறாயினும் வாரிதியார் சொல்வது சரிதான்.'**

**விட்டிட்டுப் பார்த்தாலும் பொருள் சரியாத்தான் இருக்கு.**

* * * * *


**7. கேள்வி:-** தேர்தல் பிரச்சாரத்தில் தமிழ்நாட்டு முதலமைச்சரின் தாயையே இழிவுபடுத்தி தி.மு.க அணியின் முக்கியஸ்தர் ஒருவர் பேசியிருப்பதைப் பார்த்தீர்களா?

**பதில் :-** பார்த்துத் தலைகவிழ்ந்தேன். ஒருவரையொருவர் எல்லைமீறித் தரக்குறைவான வார்த்தைகளால் தூற்றுவதை ஒரு நாகரிகமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். 'புரியுப்பைத்' தட்டினால் இவர்களின் அநாகரிகப் பேச்சுக்கள் காதைக் கூசச் செய்கின்றன. தலைவர் எவ்வழி மக்களும் அவ்வழி என்று போனால் நாளை தமிழ்நாடு என்னாகப் போகிறதோ? மக்கள்தான் இத்தகையவர்களைத் தண்டிக்கவேண்டும். வாக்குக்குப் பணம் வாங்கப் பழகிவிட்ட தமிழ்நாட்டு மக்களுக்கு அந்தத் துணிவு வருமா?

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ 'நிலத்திற் கிடந்தமை கால் காட்டும் காட்டும் குலத்திற் பிறந்தார் வாய்ச் சொல்' இவர்கள் தலைவரின் 'குறள்ஓவியத்தைத்' தானும் படிக்கமாட்டார்களா?**

* * * * *

**8. கேள்வி:-** வடமாகாணசபையின் வருங்கால முதலமைச்சர் பதவிக்கு வரவேண்டுமென தமிழரசுக்



கட்சித்தலைவர் மாவைசேனாதிராஜா, பத்திரிகையாளர் வித்தியாதரன், மாகாணசபையின் முன்னாள் சபை முதல்வர் சி.வி.கே சிவஞானம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் போன்ற பலரும் காத்திருக்கிறார்கள்; என்று பேசப்படுகிறதே. இவர்களுள் யாரை அப்பதவியில் நியமித்தால் சிறப்பாக இருக்கும்?


**பதில் :-** மாகாணசபைத் தேர்தல் நடக்குமா? என்பதே ஐயமாக இருக்கிறது. நடந்தால்த்தான் உங்கள் கேள்விக்குப் பதில் சொல்லவேண்டி வரும். நடக்கும் என்று வைத்துக் கொண்டு வேண்டுமானால் பதில் சொல்லுகிறேன்.

கஷ்டப்பட்டு, 'பிகு' பண்ணி, விருப்பின்றி வருபவர் போல வந்து, பதவி சுகத்திற்காக கட்சியையும் இனத்தையும் பிரித்து, தமிழினத்தைப் பலவீனப்படுத்தியதோடு, மாகாண வளர்ச்சிக்காக வந்த பணத்தில் அரைவாசிக்கு மேல் திருப்பி அனுப்பிய, (அமைச்சர் சரத் வீரசேகர அவர்கள் இச்செய்தியைச் சென்றவாரம் யாழ்ப்பாணத்தில்நின்றே துணிவாகச் சொல்லியிருக்கிறார்.) இறந்தகால முதலமைச்சரோடு ஒப்பிட்டால் இவர்களுள் எவர் வந்தாலும் சிறப்பாய்த்தான் இருக்கும் போல் தெரிகிறது.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ இனியேனும் தமிழர்கள் 'தேராத் தெளிவு' கொள்ளாமல் இருந்தால் சரி.**

* * * * *

**9. கேள்வி:-** சென்ற முறை நீங்கள் சொன்னது உடனேயே நடந்துவிட்டதே. முன்னாள் பேராயர் இராயப்பு யோசப்புக்காக நாடாளவில் துக்கம் அனுஷ்டிக்க, நாடாளுமன்ற உறுப்பினர் அடைக்கலநாதன் கோரிக்கை விடுத்தும் அரசு அதற்கு செவிசாய்க்காமல் விட்டுவிட்டதே?



**பதில் :-** போர்க்காலத்தில், மறைந்த பேராயர் தமிழ்மக்களின் நிலைமையை உணர்த்தி உலகத்திற்கு விட்ட அறிக்கைகளைக் கண்ட பின்னும் அவரை உயிரோடு இருக்கவிட்டதே, சிங்கள அரசுகள் அவருக்குச் செய்த மரியாதைதானே.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ கூட்டமைப்பு அல்லவா கோரிக்கை விடுத்திருக்கவேண்டும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் கொரோனாத் தடுப்பூசி ஏற்றிய சிலருக்குக் குருதி உறைதல்

## விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவிப்பு

இலங்கையில் கொவிட் தடுப்பூசிகளை பெற்றுக் கொண்ட 4 – 6 பேர் குருதி உறைதல் நோய்க்கு உள்ளாகியுள்ளனர்.

எனினும் அவர்களுக்குக் குருதி உறைதல் நோய் ஏற்பட்டமையில் கொவிட் தடுப்பூசி தாக்கம் செலுத்துகின்றது என்பதற்கு ஏதுவான காரணிகள் இதுவரையில் இனங்காணப்படவில்லை.

எனவே, இது தொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் நியமிக்கப்பட்டுள்ள விசேட வைத்திய நிபுணர்கள் அடங்கிய குழு பரிசோதனைகளை முன்னெடுத்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

கொவிட் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டவர்களுக்குக் குருதி உறைதல் ஏற்பட்டுள்ளதாக சில நாடுகள் தெரிவித்துள்ளன.

எனினும் தடுப்பூசி ஏற்றிக் கொண்டுள்ளமை குருதி உறைதலில் நேரடித் தாக்கம் செலுத்தவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தல் கிடைக்கப்பெற்றவுடன் நாடளாவிய ரீதியிலுள்ள எந்தவோர் அரச வைத்தியசாலைக்கும் கொவிட் தடுப்பூசி பெற்றுக்கொண்ட நபர்கள் 3 நாள்களின் பின்னர் அல்லது 3 வாரங்களுக்குள் எந்த நோய்க்காகச் சிகிச்சை பெறுவதற்கு வைத்தியசாலைக்கு வருகை தந்தாலும் அந்த நபர் தொடர்பில் தகவல்களை வழங்குமாறு சுகாதார அமைச்சின் தொற்று நோய் பிரிவினால் விசேட சுற்று நிருபம் வெளியிடப்பட்டது.

இதற்காக 24 மணித்தியாலமும் இயங்குகின்ற அவசர தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

விசேட வைத்திய நிபுணர்கள் இருவர் இதற்காக பிரத்தியேகமாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அதற்கமைய வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வைத்தியசாலைக்கு வந்த நபர்கள் தொடர்பில் தகவல்கள் கிடைத்துள்ளன.

இவர்களில் குருதி உறைதல் நோயுடன் தொடர்புடைய 4 – 6 பேர் உள்ளடங்குகின்றனர். இவர்களில் டெங்கு நோய்க்கும் உள்ளாகியுள்ளார்கள்.

அத்தோடு இது தொடர்பில் பரிசோதனைகளை முன்னெடுப்பதற்காக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் விசேட வைத்திய நிபுணர்கள் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இவர்களால் தொடர்ந்தும் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனினும் தடுப்பூசி ஏற்றிக் கொண்டதால் தான் குருதி உறைதல் ஏற்பட்டுள்ளது என்பதற்கான காரணிகள் இனங்காணப்படவில்லை.

எவ்வாறிருப்பினும் தடுப்பூசியை பெற்று 4 வாரங்களின் பின்னர் குறித்த நால்வருக்கும் இவ்வாறு குருதி உறைதல் நோய் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் பரிசோதனைகள் இடம்பெறுவதால், தடுப்பூசி ஏற்றிக்கொண்டதால் தான் குருதி உறைதல் நோய் ஏற்பட்டுள்ளது என்று கூற முடியாது. அத்தோடு வேறு சில நோய்களால் பாதிக்கப்பட்டோருக்குக் கூட இவ்வாறு குருதி உறைதல் நோய் ஏற்பட வாய்ப்புள்ளது. – என்றார்.

# மாகாண சபைத் தேர்தல்களை அரசு விரைந்து நடத்த வேண்டும்!

## துரைரெத்தினம் கோரிக்கை



மாகாண சபையில் நல்லாட்சி அமுல்படுத்தப்பட வேண்டுமானால் மாகாண சபைத் தேர்தலை விரைவாக அரசாங்கம் நடத்த வேண்டுமென முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எப். பத்மநாபா மன்றத் தலைவருமான இரா. துரைரெத்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெத்தினம் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

மாகாணசபை முறைமை ஐம்பது வீத விகிதாசாரம், ஐம்பது வீத விகிதாசாரத் தொகுதி முறை தேர்தல் சட்டமூலம் மூன்றில் இரண்டு பலத்துடன் வெற்றி பெற்றாலும் உருவாக்கப்பட்ட புதிய எல்லை நிர்ணயம் நாடாளுமன்றத்தில் நிராகரிக்கப்பட்டது. இதனால் தேர்தல் நடைபெற வேண்டுமாயின் சட்டமூலம் ஒன்றை நிறைவேற்ற வேண்டும்.

இந்த நிலையில் நான்கு வருடங்கள் மாகாண சபையில் மக்கள் ஆட்சி இல்லாமலாக்கப்பட்டு ஒரு சில ஆளுநர்களின் ஒருபக்கச் சார்பான ஆட்சி முறை நடந்தேறி வருகின்றது.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் மூவின மக்களும் வாழ்ந்து கொண்டு வருகின்றமையால் ஆளுநரால் அனைத்து மக்களையும் திருப்திப்படுத்தக் கூடியவாறு செயல் வடிவம் கொடுக்க வேண்டும். ஒரு கட்சியைச் சார்ந்த செயற்திட்டங்களை முன்வைப்பதால் நல்லாட்சி நடைமுறையில் இருக்காது.

இதேவேளை, ஜெனிவா தீர்மானத்தில் கூட இந்திய அரசால் மாகாணசபை முறைமை அதிகாரப் பகிர்வு விடயத்தை சர்வதேச நாடுகளின் பார்வையின் கீழ் இலங்கை அரசுக்கு எடுத்துக் கூறிய நிலையில் இலங்கை அரசின் அமைச்சரவை தீர்மானத்தில் தொகுதி 70 வீதம், 30வீதம் விகிதாசாரம் என்னும் அடிப்படையில் புதிய தேர்தலை நடத்துவதற்கான ஆலோசனைகள் முன்வைக்கப்பட்ட இந்தத் தருணத்தில் ஒரு சில பௌத்த மத குருக்களால் மாகாணசபைத் தேர்தலை நடத்தக் கூடாதென கருத்துக் கூறியமை நாகரிகமான செயலல்ல. மாகாண சபை என்பது மக்கள் பிரதிநிதிகள் ஊடாகவே அமுல்படுத்துவது நல்லாட்சியைக் கொண்டதும், ஜனநாயகத்துக்கான நடைமுறையுமாகும்.

விகிதாசாரமா, தொகுதியா என்னும் விடயம் முடிவுகளை எடுக்கும் போது இன விகிதாசாரம் கவனத்தில் கொள்ளப்படவேண்டும். இன விகிதாசார முறை மாற்றப்படாமலும் வாக்களிக்கும் தனிமனித சுதந்திரம் பாதிக்கப்படாமலும் சிறுபான்மையினரின் உரிமைகள் மதிக்கப்படக் கூடியவாறு, தேர்தல் முறையை அமுல்படுத்த கட்சிகளுடன் பேசி விரைவாகத் தீர்மானங்களை எடுத்து நாடாளுமன்றத்தில் சட்ட மூலத்தைக் கொண்டு வந்து முழு இலங்கையிலும் முப்பது வருடங்களுக்கு மேலாக அமுல்படுத்தப்பட்ட மாகாணசபை முறைமை நான்கு வருடங்களாக ஒன்பது மாகாணங்களிலும் வாக்களிப்பதற்காக வைத்த முற்றுப்புள்ளியை இல்லாமல் செய்து குறிப்பாக, மூவின மக்கள் வாழுகின்ற மாகாணம் ஜனநாயக ரீதியாகச் செயற்பட வைப்பதற்கு வழி சமைக்குமாறு கேட்டுக் கொள்வதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# பொன்சேகாவை ‘கழுதை’ என அழைத்தமைக்கு மன்னிப்பு கோரினார் அமைச்சர் சமல் ராஜபக்ஷ

அமைச்சர் சமல் ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் நடந்த வார்த்தைப் போரின்போது முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை கழுதை என்று அழைத்தமைக்கு மன்னிப்புக் கோரினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் (வியாழக்கிழமை) காலை அமைதியின்மை ஏற்பட்டிருந்தது.

அமைச்சர் சமல் ராஜபக்ஷவின் பெயரைக் குறிப்பிட்டு சரத் பொன்சேகா ஒரு சில கருத்துக்களைப் பகிர்ந்திருந்தார்.

இதன்காரணமாக இருவருக்கும் இடையில் வார்த்தைப் போர் இடம்பெற்றிருந்தது. 2010 மற்றும் 2015 ஆண்டுகளுக்கிடையில் தான் அன்றைய அரசாங்கத்தால் அநியாயமாக நடத்தப்பட்டேன் என சரத் பொன்சேகா தெரிவித்திருந்தார்.

மேலும் தனக்கு விதிக்கப்பட்ட தேவையற்ற தண்டனையைத் தொடர்ந்து தன்னை நாடாளுமன்றத்துக்கு செல்வதற்கு அனுமதிக்குமாறு மேன்முறையீடு செய்திருந்தேன் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

இதன்போது கடுமையாக கோபமடைந்த சமல் ராஜபக்ஷ, ‘பொன்சேகா ஒரு கழுதை என்றும் முடிந்தால் வெளியே வரவும் எனவும் சவால் விடுத்திருந்தார்.

ராஜபக்ஷ பொன்சேகாவை கழுதை என்று அழைப்பதைக் கேட்ட பின்னர் ஒரு பரபரப்பான வார்த்தை பரிமாற்றம் நடந்தது.

இதனையடுத்து, ஏற்பட்ட பதற்றமான சூழ்நிலையை அடுத்து, தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்ட நாடாளுமன்ற நடவடிக்கைகள் மீண்டும் தொடங்கின.

இதன்போது, அமைச்சர் சமல் ராஜபக்ஷ தனது நடத்தை குறித்து முறையான மன்னிப்புக் கோரினார்.

தான் கூறிய விடயங்களின் விளைவாக யாருடைய உணர்வையும் புண்படுத்தியிருந்தால் மன்னிப்புக் கேட்க விரும்புகிறேன் என சமல் ராஜபக்ஷ கூறினார்.




## மறுவயற் பயிர்கள் நடுகை



விவசாயிகள் வழமையாக சிறுபோகம், காலபோகம் என இரண்டு பருவங்களில் பயிரிட்டு வருகின்றனர். இப்பழக்கமானது காலத்திற்கு ஏற்ப மாறியுள்ளது. விளைநிலங்கள் மட்டுப்படுத்தப்படுவதும், உணவுக்கான தேவை அதிகரிப்பதும் இதன் பிரதான காரணமாகின்றது. எனவே, நெல் வயலை இரண்டு முதல் மூன்று மாதங்கள் வரை பயிர் செய்யாது தரிசாக விடுவது நியாயமான ஒன்றல்ல. இதனால்தான் விவசாயிகள் ஒரு குறுகிய காலப் பயிரை இடைப் போகத்தில் அல்லது மூன்றாம் போகத்தில் பயிரிடுகின்றனர். இதற்கு தொடர்ச்சியாக நெற் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் வயல் நிலங்களில் மறுவயற் பயிர்களை நடுகை செய்வது, திருப்திகரமான ஒன்றாக அமையும்.

இதன் மூலம் மண் மூலப்பொருள்கள் மேம்படுத்தப்படுவதோடு, நோய், பீடைகளை இயற்கையான முறையில் கட்டுப்படுத்தக் கூடியதாகவும் உள்ளது. இதன் பயனாக விவசாயிகளின் வருமானம் அதிகரிப்பதுடன், அதிகளவான விளைச்சலையும் பெறலாம். பொதுவாக இடைப் போகத்தில், விவசாயிகள் அதிகளவில் பாசிப்பயறை பயிரிடுவதற்கே அதிக வாய்ப்புள்ளதாக ஆராய்ச்சிகளின் மூலம் தெளிவாகின்றது. விவசாயிகள் பாசிப்பயறை அதிகளவில் நடுகை செய்ய முயற்சிப்பதற்கான காரணங்களாவன:–

குறுகிய காலத்தில் விளைச்சலை பெறக் கூடியதாயிருத்தலும், விளைப்பொருளுக்கு ஒரு நிலையான விலை கிடைக்கின்றமையும் ஆகும். ஆனால் அதிக உற்பத்தி செலவு காரணமாக, சிலர் மூன்றாவது பருவத்தை தவிர்க்க முயற்சிக்கின்றனர். உற்பத்தி செலவுகள் அதிகரிப்பதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று அறுவடையை மேற்கொள்ள அதிகளவில் தொழிலாளர்களிற்கான செலவு ஏற்படுகின்றமையாகும். தொழிலாளர்களுக்கு அதிகளவான சம்பளத்தை வழங்கி, அவர்களிடமிருந்து உழைப்பைப் பெறுவதிலும்சிரமம் ஏற்படுகின்றது

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

# பதுளைச் சிறைக்கைதி தூக்கிட்டுத் தற்கொலை

பதுளை சிறைச்சாலையில் கைதி ஒருவர், சுருக்கிட்டு தற்கொலைக்கு முயற்சித்த சம்பவமொன்று, கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது. கழுத்தில் சுருக்கிட்டு தொங்கிய நிலையிலிருந்த கைதியை, சிறைக் காவலர்கள் மீட்டு, பதுளை பொது வைத்தியசாலையில் சேர்த்தனர்.

இந்நிலையில் அவருக்கு தீவிர சிகிச்சைகள் அளிக்கப்பட்ட போதிலும், சிகிச்சை பலனின்றி, உயிரிழந்துள்ளார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பதுளை கலுகல்பிட்டிய என்ற இடத்தைச் சேர்ந்த பிரமித் சானக்க என்ற 36 வயது நிரம்பிய நபரே, இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

ஹெரோயின் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில், பதுளைப் பொலிசாரால் கைது செய்யப்பட்ட இவர், பதுளை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது, நீதிபதி அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டிருந்தார். இந்நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir



**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
(மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர், மெல்பேண், ஆஸ்திரேலியா)

# பக்கவிளைவற்ற பக்குவமான மருத்துவம் ஹோமியோபதி

சிறப்பு என்பது நல்லதொரு வரமாகும். ஆனால் இறப்பும் அதனுடன் இணைந்தே இருக்கிறது. பிறந்தவுடன் கொண்டாடி மகிழ்கின்றோம். பல வித கற்பனைகள் சிறகடிக்க வாழ்க்கை என்னும் வானில் சிறகடித்துப் பறந்தும் வருகிறோம். அப்படி சிறகடிக்கும் வாழ்வில் எப்படியோ நோய்கள் வந்து எங்களின் இன்பக் கனவுகளைச் சிதறடித்து விடுவதையும் காண்கிறோம். இதனால்தான் 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்னும் பொன் மொழியும் ஏற்பட்டதோ என்னவோ..! நோயிலிருந்து விடுபட மண்ணில் வந்த அருந்துணையே மருத்துவம். அந்த மருத்துவம் நாட்டுக்கு நாடு வேறுபட்டதாய், வேறு வேறு பெயர்களில் தோற்றம் பெற்றாலும் மருத்துவத்தின் தலையாய பணி மண்ணில் வாழுகின்ற மக்களை இயன்றவரை நலமுடன் வாழ்ந்திடச் செய்வதேயாகும். அந்தவ கையில் காலத்துக்குக்காலம் பல மருத்துவ வழிகள் உருவாக்கப்பட்டன. அந்த வழியில் இன்று உலகின் இரண்டாவது மருத்துவ வழியாகச் சிறந்து விளங்குவதுதான் ஹோமியோபதி என்பதை மனமிருத்துதல் அவசியமாகும்.

இந்த மருத்துவம் ஐரோப்பா, அமெரிக்கா, தென் கிழக்கு ஆசிய நாடுகள், இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் என்று பரந்து விரிந்திருக்கிறது.

பதினெட்டாம் நூற்றாண்டின் கடைசிப்பகுதி. ஆங்கில மருத்துவம் முழுமை பெறாத காலம். அக்காலப் பகுதியில் மக்களை பெயர் தெரியாத பல நோய்கள் வாட்டி எடுத்துக் கொண்டிருந்தன. ஆங்கில மருத்துவ முறையினைச் சார்ந்து நின்ற ஒருவருக்கு மக்கள் படுகின்ற வேதனையைப் பார்த்துக் கொண்டிருக்க இயலாமல் போய்விட்டது. ஆங்கில மருத்துவமானது நோய்களைக் குணப்படுத்துவதைவிட – நோயாளிகளுக்கு பெருமளவு வேதனையினைத்தான் தருகிறது என்பதை மனமார உணர்ந்த அவர் மருத்துவத்துவத்தை விட்டு சிறிதுகாலம் ஒதுங்கியே இருந்தார்.

ஆனாலும் அவரால் ஒதுங்கியபடியே இருந்திட முடியவில்லை. மருத்துவம் சார்ந்த நூல்களை மொழிபெயர்க்கும் பணியினைச் செய்யத்தொடங்கினார். ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த அறிஞர் டாக்டர் கல்லென் அவர்களின் நூலினை மொழிபெயர்க்கும் பணியில் ஈடுபட்டார். அந்த நூலில் அவர் ஒரு வாசகத்தைக் கண்டார். மலேரியாவைக் குணப்படுத்தும் தன்மை சிங்கோனா மரப்பட்டைக்கு இருக்கிறது என்பதாகும். அதனைப்பரிசோதித்திட சிங்கோனா மரப்பட்டையினை அவரே சாப்பிட்டார். மலேரியா பாதித்தால் என்னென்ன அறிகுறிகள் தென்படுமோ அத்தனையும் அவருக்கும் தென்பட்டது. காய்ச்சலும் குளிரும் அவரையும் பாதித்தது. எது மருந்தாகப் பயன்படுகிறதோ அதுவே நோயை உண்டாக்கும் கூறுகளையும் பெற்றிருக்கும் என்னும் அடிப்படையான முரண்பாட்டை அவர் தன்னையே மையப்படுத்தி அறிந்து கொண்டார். அவர்தான் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த டாக்டர் சாமுவேல் ஹனிமன் ஆவார்.1796 ஆம் ஆண்டில் இவர் கண்ட தத்துவத்தின் அடிப்படையில் உருவானதுதான் உலகெங்கும் பரந்திருக்கும் ஹோமியோபதி ஆகும். அந்த மேதை 1755 ஆம் ஆண்டு ஏப்ரல் 10 ஆம் திகதி பிறந்தார். அவர் பிறந்த தினமான ஏப்ரல் 10 ஆந் திகதியையே உலக ஹோமியோபதி நாளாக கொண்டாடப்பட்டு வருகிறது. ஏப்ரல் 7 ஆந் திகதி உலக சுகாதர தினம் கொண்டாடப்பட்டது. அதனைத் தொடர்ந்து டாக்டர் சாமுவேல் ஹனிமனின் பிறந்த நாள் உலக ஹோமியோபதி நாளாகக் கொண்டாடப்படுகிறது என்றால் – உடல் நலத்தில் ஹோமியோபதி எந்தளவு முக்கியத்துவத்தைப் பெறுகிறது என்பதும் வெள்ளிடை மலையாய்த் தோன்றுகிறதல்லவா?



ஒத்ததை ஒத்தது குணப்படுத்தும் என்பதைத் தன்னை மையப்படுத்தி டாக்டர் சாமுவேல் ஹனிமன் கண்டதே ஹோமியோபதி மருத்துவத்தின் அடிப்படைக் கோட்பாடு. இதனைத்தான் முள்ளை முள்ளால் எடுப்பதுபோல் என்றும் எடுத்துக் கொள்ளலாம் அல்லவா ?

உலகம் முழுவதும் ஹோமியோபதி மருத்துவம் வளர்ந்தும் வருகிறது. மக்களும் பயனை அடைந்தும் வருகிறார்கள். இம்மருத்துவம் பாதுகாப்பானதாகவும் சிறந்த பல தன்மைகளைக் கொண்டதாகவும் விளங்குகிறது. ஹோமியோபதி மருத்துவம் நோயுற்றவருக்கு – மனரீதியாகவும், சிந்தனைரீதியாகவும், ஆன்மீக மற்றும் உடல்ரீதியாகவும், சமநிலையினை உண்டாக்குகிறது. இதுதான் இம்முறையின் விசேடதன்மை எனலாம்.

ஹோமியோபதி என்பது கிரேக்கச் சொல்லாகும். ஹோமோ என்றால் 'ஒத்த மாதிரியான' என்றும், பேத்தே என்றால் 'வேதனை' என்றும் பொருளாகும். ஹோமியோபதியின் தன்மையே வித்தியாசமானதாகும். அதாவது குறைந்த அளவிலான மருந்துகளைக் கொடுத்து நோய்களைக் குணப்படுத்துவதேயாகும். மருந்துகள் பல இன்று பக்கவிளைவுகளை ஏற்படுத்தி இருந்த நோயோடு இன்னும் அவதியை அளித்து நிற்கின்றன. ஆனால் ஹோமியோபதி மருத்துவத்தில் பக்கவிளைவுகள் அற்ற மருந்துகளே கொடுக்கப்படுகின்றன. இயற்கை விதியின் அடிப்படையாக விருப்பத்தை விரும்பம் மூலம் குணமாக்குதல் என்னும் அடிப்படையில் அமைந்து நலன் விளைவிக்கும் நிலையில் இருப்பதுதான் இம்மருத்துவம்.

ஹோமியோபதியின் தந்தையான டாக்டர் சாமுவேல் ஹனிமன் ஆர்கனான் என்னும் அரிய ஹோமியோபதி நூலினை ஆக்கி அளித்திருக்கிறார். ஹோமியோபதி மருத்துவமுறையினை இவர் சீர்படுத்த ஆறு ஆண்டுகள் எடுத்தன. நான்கு ஆண்டுகளின் பின்னர் மெடிசின் ஒவ் எக்ஸ்பீறியன்ஸ் என்னும் நூலினை ஆக்கினார். இதில் இருந்துதான் ஆர்கனான் நூல் 1810 இல் முதற்பதிப்பும், 1816 இல் இரண்டாம் பதிப்பும், 1824 இல் மூன்றாம் பதிப்பும், 1829 நான்காம் பதிப்பும், 1831 இல் ஐந்தாவது பதிப்புமாக இந்த நூல் வெளியிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. அந்த அளவுக்கு இந்த நூலின் முக்கியத்துவம் இருந்திருக்கிறது.

> உலகம் முழுவதும் ஹோமியோபதி மருத்துவம் வளர்ந்தும் வருகிறது. மக்களும் பயனை அடைந்தும் வருகிறார்கள். இம்மருத்துவம் பாதுகாப்பானதாகவும் சிறந்த பல தன்மைகளைக் கொண்டதாகவும் விளங்குகிறது. ஹோமியோபதி மருத்துவம் நோயுற்றவருக்கு – மனரீதியாகவும், சிந்தனை ரீதியாகவும், ஆன்மீக மற்றும் உடல் ரீதியாகவும், சமநிலையினை உண்டாக்குகிறது.

டாக்டர் சாமுவேல் ஹனிமனால் படைக்கப்பட்ட இந்த நூல் – ஹோமியோபதியினைப் படிக்க விரும்பும் அனைவருக்குமே பெரும் பயனை அளித்திடும் வகையிலேதான் அமைந்திருக்கிறது. ஹோமியோபதி மருத்துவமுறைக்கு மூலதாரமான இந்தப்படைப்பு ஆர்கனான் ஒவ் மெடிசன் என்றுதான் பெயர். இப்படைப்பானது படைத்தளித்த டாக்டர் சாமுவேல் ஹனிமன் அவர்களது காலத்திலேயே ஆறுபதிப்புக்களை கண்டது என்பதுதான் மிகவும் பெருமைக்குரிய விடயம்.ஜேர்மன் மொழியில் படைக்கப்பட்ட இந்த அரிய ஆக்கமானது பின்னர் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. ஹோமியோபதி தொடர்பான பல சந்தேகங்கள் எழுவார்க்கு டாக்டர் ஹனிமன் அவர்களின் இந்தப்படைப்பு சிறந்த விளக்கத்தை அளிக்கும் பெருந்துணையாக அமைகிறது.

நோயாளிகளை அணுகும் முறையில் ஹோமியோபதி மற்ற மருத்துவ முறைகளிலிருந்து வேறுபடுகிறது எனலாம். நோய்களுக்கான மருந்து என்பதைத் தவிர்த்து ஒவ்வொரு மனிதருக்குமான மருந்து என்பதே அதன் அணுகுமுறையாய் அமைகிறது.

மனிதர்கள் ஒவ்வொருவரும் தனித்துவம் மிக்கவர்கள். அதனால் அவர்களுக்கு வருகின்ற வியாதிகளுக்கு ஒரேவிதமான மருந்துகளைக் கொடுப்பது உகந்ததல்ல என்பது டாக்டர் ஹனிமனின் கருத்தாகும். உதாரணமாக காய்ச்சல் வரும்பொழுது எல்லோருக்கும் ஒரேவிதமான அறிகுறிகள் வெளிப்படுவதில்லை. இதற்குக் காரணம் ஒவ்வொருவரும் தனித்துவமானவர்கள் என்பதுதான் டாக்டர் ஹனிமன் அவர்களின் எண்ணமாய் இருந்தது. தனித்துவமாய் இருக்கும் பொழுது மருந்து மட்டும் எப்படி பொதுவாக இருக்கலாம் என்னும் சிந்தனை அவரிடம் எழுந்ததால் அவரின் அணுகுமுறை வேறுபட்டதாக அமைந்தது. இதன்படி டாக்டர் ஹனிமன் 'உயிராற்றல்' பற்றிய கோட்பாடுகளை வளர்த்தெடுத்தார்.

உடல் உறுப்புகள் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டு ஒன்றையொன்று சார்ந்து , ஒன்றையொன்று தீர்மானித்துச் செயற்படுவதற்கான ஒருங்கிணைப்புச் சக்தியாக , உடலெங்கும் பரவி ஆளுமை செலுத்தும் ஆற்றலே உயிராற்றல் என்று டாக்டர் ஹனிமன் உணர்ந்தார். அதனைத் தன்னுடைய படைப்பான ஆர்கனன் ஒவ் மெடிசன் என்பதில் சுட்டிக் காட்டுகிறார்.

இன்று உலகம் முழுவதும் நவீன மருத்துவம் ஆட்சி செலுத்தியே நிற்கிறது. ஆனாலும் ஆயுள் வேதம், சித்தவைத்தியம், யுனானி, அக்குபக்ஷர், ஹோமியோபதி மருத்துவ முறைகளும் இல்லாமல் போகவில்லை. நவீன மருத்துவத்தில் பல முன்னேற்றங்கள் வந்துவிட்டன. என்றாலும் ஆய்வுகூட முடிவுகளை மையப்படுத்தி நவீன மருத்துவம் பயணிக்கிறது. ஆய்வுகூட முடிவுகள் நோய் குணமாகிவிட்டது என்று காட்டும். குணமானோருக்கு மீண்டும் அந்தநோய் வந்துவிடும். மீண்டும் ஆய்வூகூடத்தை நவீன மருத்துவம் நாடும். அதற்கிடையில் பல்வகையான மருந்துகள் ஒருபக்கம் குவிந்துவிடும்.நோயைத் தீர்க்கக் கொடுக்கும் மருந்துகளின் பக்க விளைவுகளால் வேறுவிதமான வேதனைகள் அங்கே வந்து நிற்கும். இவை எவையுமே இல்லாமல் மருந்தும் மருத்துவமும்தான் வேண்டும் என்று மக்கள் பலர் எண்ணத் தலைப்பட்டு விட்டார்கள். அவர்கள் அனைவருக்கும் உற்ற நண்பனாய், மந்திரியாய், நல்லாசானாய், நல் வெளிச்சமாய் ஹோமியோபதி வந்தமைந்திருக்கிறது.

கடுமையான மற்றும் நீடித்த சுகாதாரப் பிரச்சினைகளுக்கு ஹோமியோபதி பலனளிக்கும் என்ற நம்பிக்கை இன்று மக்கள் மத்தியிலே ஏற்பட்டிருக்கிறது என்பதை யதார்த்தமாய் காணமுடிகிறது. இயற்கையில் கிடைக்கும் பொருள்களில் இருந்தே ஹோமியோபதிக்கான மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. குறைந்த செலவினை உடையதாகவும் இம்மருத்துவம் விளங்குகிறது. ஹோமியோபதி மருத்துவத்தின் இருநூறாவது ஆண்டுவிழா ஜேர்மனியில் கொண்டாடப்பட்ட வேளை ஹோமியோபதி என்பது முழுமையான மருத்துவம், நோய் தீர்க்கும் ஆற்றல் நிறைந்தது என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது என்று ஜேர்மனியின் மருத்துவத்துறையின் அமைச்சரே கூறியுள்ளார் என்பது முக்கிய கருத்து.

(11 ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்கு பிள்ளைகளின் தந்தை முதலையிடம் சிக்குண்டார்

## திருக்கோவிலில் சம்பவம்

திருக்கோவில் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இத்தி குளத்தில் நீராடச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் முதலை பிடியில் சிக்கி காணாமல் போயுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியவில் இடம்பெற்றுள்ளதாக திருக்கோவில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பி.கே.திலகரட்ண தெரிவித்தார்.

குடி நிலம் பகுதியில் வசிக்கும் 62 வயதுடைய 4 பெண் பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு முதலை பிடியில் சிக்கி நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார்.

இந்நிலையில், காணாமல் போனவரைத் தேடும் பணி முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையுடன், மீட்பு பணிக்காக கடற்படையின் உதவியை நாடியுள்ளதாக திருக்கோவில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார்.

# ஆஸ்திரேலியாவில் தொழில் தருவதாக கூறி பண மோசடி செய்த இருவர் கைது

பண்டாரகம – பொல்கொட பகுதியில் ஆஸ்திரேலியாவில் தொழில் வாய்ப்பைப் பெற்றுத்தருவதாகத் தெரிவித்து பண மோசடியில் ஈடுபட்டு வந்த சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித்றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

பண்டாரகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொல்கொட பகுதியில் ஆஸ்திரேலியாவில் தொழில் வாய்ப்பைப் பெற்றுத் தருவதாகக் குறிப்பிட்டு பண மோசடியில் ஈடுபட்டுவந்த சந்தேக நபர்கள் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்கள் இருவரும் கடந்த வியாழக்கிழமை பண்டாரகம பகுதியில் நேர்முகப்பரீட்சையொன்றை நடத்தியுள்ளதுடன் இதன்போதே பொலிஸார் அவர்களைக் கைது செய்துள்ளனர்.

தெஹிவளை மற்றும் பட்டகொட ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளமையுடன், இவர்களிடமிருந்து 96 வெளிநாட்டு பயண பற்றுச்சீட்டுகளும் , ஒரு லட்சத்து 52 ஆயிரத்து 390 ரூபா பணமும் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் இருவரும் வெளிநாடுகளில் தொழில் வாய்ப்பைப் பெற்றுத் தருவதாகத் தெரிவித்து இதற்கு முன்னரும் இவ்வாறு பண மோசடிகளில் ஈடுபட்டுவந்துள்ளனர் எனத் தெரியவந்துள்ளது. இந்நிலையில் இவர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை பண்டாரகம பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# உறுப்பினர்கள் சிலரின் செயற்பாடுகள் நாடாளுமன்றை பலவீனப்படுத்துகின்றன

## அமைச்சர் பந்துல குணவர்தன கவலை



உறுப்பினர்கள் சிலரின் செயற்பாடுகள் நாடாளுமன்றத்தை பலவீனமடையச் செய்யும் வகையில் அமைகின்றதென அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

இந்த நாடாளுமன்றத்தில் அண்மையில் இடம்பெற்ற சில செயற்பாடுகள் ஏற்புடையவையல்ல.

அதாவது நாடாளுமன்ற உறுப்பினரின் சில செயற்பாடுகள், நாடாளுமன்றத்தைக் கீழ் நோக்கி கொண்டு செல்லும் வகையில் அமைந்துள்ளது.

தினேஷ் குணவர்தன, லக்ஷ்மன் கிரியெல்ல ஆகியோர் இந்த நாடாளுமன்றத்தில் பல வருடங்களாக நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்துள்ளனர்.

ஆனால் இத்தகைய காலகட்டத்தில் அநாவசியமாக கேள்விகளை கேட்டு, தங்களுக்கு ஏற்றவகையில் செயற்படுவதற்கு இதுவரை காலமும் இலங்கை நாடாளுமன்றத்தில் எவருக்கும் இடமளிக்கப்படவில்லை.

நாட்டிலுள்ள எந்த அமைப்புக்களும் நீதிமன்றம், சட்டத்திட்டங்கள் ஆகியவற்றை மதித்து செயற்படாவிடின் இடையிலேயே காணாமல் போய்விடும்.

மேலும் அதிபரின் கருத்துக்கு மதிப்பளித்து கல்வி நிலையம் இயங்கவில்லை என்றால் வீழ்ச்சியை நோக்கியே செல்லும்.

நாடாளுமன்றம் முழு நாட்டையும் பிரதிபலிக்கின்றது என்பதை கருத்திற்கொண்டு ஒவ்வொரு மக்கள் பிரதிநிதிகளும் செயற்பட வேண்டும். – என அவர் குறிப்பிட்டுள்ளார்

# நாட்டில் பல்வேறு வாகன விபத்துகளில் 24 மணித்தியாலங்களில் 13 பேர் பலி!

வாகன விபத்துக்களால் நேற்று காலை ஆறு மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலத்திற்குள் 13 பேர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

பண்டிகைக் காலத்திற்கு இன்னமும் சில தினங்களே எஞ்சியுள்ள நிலையில் வாகன விபத்துக்கள் மீண்டும் அதிகரித்து வருகின்றமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இந்நிலையில் நேற்று காலை ஆறு மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலத்தில் வாகன விபத்துகளில் சிக்கி 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

அவர்களுள் 7 பேர் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற விபத்துகளில் உயிரிழந்துள்ளதுடன், எஞ்சிய ஆறு பேரும் இதற்கு முன்னர் இடம்பெற்ற விபத்துகளில் காயமடைந்து சிகிச்சை பெற்றுவந்தவர்களாவர்.

இதன்போது , 6 பாதசாரதிகளும், 4 மோட்டார் சைக்கிள் பயணிகளும், 2 சாரதிகளும் மற்றும் பயணி ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் இந்தக் காலப்பகுதிகளில் போக்குவரத்து நடவடிக்கையில் ஈடுபடும் அனைவரும் மிகவும் கவனத்துடன் செயற்பட வேண்டும்.

வாகன சாரதிகள் மற்றும் பயணிகள் வீதிகளைப் பயன்படுத்தும் போது வீதி சட்டவிதிகளை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

இந்நிலையில் விபத்துக்களைத் தடுப்பதற்காக பொலிஸார் பல்வேறு சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அதற்கமைய பொது போக்குவரத்து நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் பஸ்கள் உள்ளிட்ட வாகனங்கள் தொடர்பில் நேற்று முதல் சிவில் உடையில் பொலிஸார் விசேட கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இதற்கு வாகன சாரதிகள் மற்றும் பயணிகள் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும். – என்று தெரிவித்தார்.

# திருமதி இலங்கை அழகியின் கிரீடத்தை பறித்த திருமதி உலக அழகிக்கு 10 - 20 ஆண்டுகள் சிறை

## ஜனாதிபதி சட்டத்தரணி யு.ஆர். டி. சில்வா தெரிவிப்பு





2021 ஆம் ஆண்டுக்கான திருமதி இலங்கை அழகி போட்டியின் வெற்றியாளரான புஷ்பிகா டி சில்வாவின் கிரீடத்தை, அவரது தலையில் இருந்து வலுக்கட்டாயமாக திருமதி உலக அழகி கரோலின் ஜூரி பறித்தார் என உறுதி செய்யப்பட்டால், அவருக்கு 10 – 20 வருடகால சிறைத்தண்டனையை பெற்றுக்கொடுக்க முடியுமென ஜனாதிபதி சட்டத்தரணி யு.ஆர். டி. சில்வா தெரிவித்துள்ளார்.

குறித்த செயற்பாட்டுக்காக உலக அழகி கரோலின் ஜூரியிடம் இழப்பீடும் கோருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள முடியுமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக சட்டத்தரணி யு.ஆர்.டி. சில்வா மேலும் கூறியுள்ளவை வருமாறு –

நடுவர் மன்றத்தை மீறி அவரது சக்தியைக் காட்டுவதற்கு கரோலின் ஜூரி முனைந்துள்ளமையையே அவரது செயற்பாடு காட்டுகின்றது.

அந்தவகையில் குற்றவாளியாக சந்தேகிக்கப்படும் கரோலின் ஜூரி மீது வற்புறுத்தல், மிரட்டி பணம் பறித்தல், திருட்டு மற்றும் காயத்தை ஏற்படுத்தியதாக குற்றம் சாட்டப்படலாம்.

இதேவேளை போட்டியின் ஏற்பாட்டுக் குழு, கரோலின் ஜூரிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கும் வாய்ப்புள்ளது.

மேலும், குறித்த நிகழ்ச்சியில் கரோலின் ஜூரியின் நடவடிக்கைகளை ஒருபோதும் மன்னிக்க முடியாதவை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற, திருமதி இலங்கை அழகிப் போட்டியில் புஷ்பிகா டி சில்வா வெற்றியாளராக அறிவிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் இடம்பெற்று சிறிது நேரத்தில் ஜூரி, அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். அதாவது, வெற்றியாளர் விவாகரத்து செய்யப்பட்டவர். அத்தகைய ஒருவர் இதில் போட்டியிட முடியாது. எனவே இரண்டாவது வெற்றியாளர், முதலாவது வெற்றியாளராகத் தெரிவு செய்யப்படுகிறார் என அறிவித்தார்.

அதன்பின்னர் ஜூரி, மேடையில் வெற்றியாளராக அறிவிக்கப்பட்ட புஷ்பிகா டி சில்வாவின் தலையில் இருந்த கிரீடத்தை அகற்றி, இரண்டாவது வெற்றியாளருக்கு அணிவித்து அவரை நிகழ்வின் வெற்றியாளராக அறிவித்தார்.

இந்த சம்பவம் சமூக வலைத்தளங்களில் வைரலாகி இருந்ததுடன் பாதிக்கப்பட்ட புஷ்பிகா டி சில்வா, தான் விவாகரத்தானவர் இல்லை என அறிவித்தமையுடன் பொலிஸிலும் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அமரர் சிவரூபன் ஞாபகார்த்த இரத்ததானம் பன்னாலையில்!

யாழ். மகாஜனக் கல்லூரியின் 1997 ஆம் ஆண்டு உயர்தர கணிதப்பிரிவு மாணவன் அமரர் குணரத்தினம் சிவரூபனின் பிறந்ததின நினைவு நாள் இன்றாகும்.

அவரது பிறந்ததினத்தை முன்னிட்டு மகாஜனக் கல்லூரி 1997 ஆம் ஆண்டு பழைய மாணவர்களும், ஏனைய நண்பர்களும், பன்னாலை கணேசா இளைஞர் கழகமும் இணைந்து நடத்தும் மாபெரும் இரத்ததான முகாம் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் பகல் ஒரு மணி வரை பன்னாலை கணேசா விளையாட்டுக் கழக மைதானத்தில் உள்ள இளைஞர் கழக அலுவலக பயிற்சிக்கூடத்தில் நடைபெறும்.

இந்த இரத்ததான முகாமில் இரத்ததானம் வழங்குபவர்களுக்கு ஒரு பயன்தரு மரக்கன்றும் வழங்கப்படவுள்ளது.

இந்த இரத்ததான முகாம் கடந்த பல வருடங்களாக நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சட்டத்தை மீறுவோருக்கு எதிராக தராதரம் பாராமல் நடவடிக்கை

## நாமல் பெருமிதம்

சட்டததை மீறுவோருக்கு எதிராக தராதரம் பாராமல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருதாக அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொலன்னறுவையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், நாட்டு மக்கள் அனைவருக்கும் நியாயமான விலையில் பொருள்களை வழங்குவதே அரசாங்கத்தின் நிலைப்பாடு எனவும் அவர் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனோ கடும் கண்டனம்



கொழும்பு, ஏப்.09

யாழ்ப்பாணம் மாநகர சபை மேயர் வி.மணிவண்ணன் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப் பட்டமையைத் தமிழ் முற்போக்குக் கூட்டணி கடுமையாகக் கண்டிக்கின்றது என அந்தக் கட்சியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மணிவண்ணனின் கைதுக்குப் பதில் அவர் மீது குற்றஞ்சாட்டி, எழுத்து மூல விளக்கம் கோரும் சட்டபூர்வ நடவடிக்கையை வடக்கு மாகாண ஆளுநர் எடுத்து, நிதானமாக நடந்துக் கொண்டிருக்க வேண்டும். ஆனால், அவரது கைதைக் கண்டித்து, ராஜ பக்ஷ அரசைக் கடுமையாக விமர்சிக்க முன்னர், தமிழ் மகாஜனம், தமது முகத்தை நிலைக்கண்ணாடியில் பார்த்துக்கொள்ள வேண்டுகின்றேன்.

இந்தக் கைது அரசை மட்டுமல்ல, நம்மவர்களையும் திருப்தியடையச் செய்திருக்கின்றது என நான் அறிகின்றேன். கோபத்துடனும், மனவருத்தத்துடனும் ஒருசேர இதை இப்போது ஒரு தமிழ் இலங்கையனாகக் கூறுகின்றேன் - என்றார்.

# தமிழரைத் தொடர்ந்தும் அச்சத்தில் வைத்திருக்க விரும்புகின்றது அரசு

## மணியின் கைது தொடர்பில் சுமந்திரன் காட்டம்



யாழ்ப்பாணம், ஏப்.09

தமிழ் மக்களைத் தொடர்ந்தும் பயப்பீதியில் வைத்திருப்பதையே அரசு விரும்புகின்றது. இதன் வெளிப்பாடாகவே யாழ்ப்பாணம் மாநகர சபை மேயர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் மாநகர மேயர் மணிவண்ணன் விசாரணையின் நிமிர்த்தம் யாழ்.பொலிஸாரால் அழைக்கப்பட்டு அதிகாலை வேளையில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு வவுனியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். இந்தத் திட்டமிட்ட கைது நடவடிக்கையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

யாழ்ப்பாணம் மாநகர சபையும் ஏனைய மாநகர சபைகளைப் போன்று மாநகர சபைகளுக்குரிய அதிகாரங்களை முழுமையாகப் பயன்படுத்த முனைகின்றபோது இவ்வாறான தடை கள் ஏற்படுத்தப்படுகின்றன.

அரசு இந்தக் கேவலமான நடவடிக்கைகளை உடன் நிறுத்த வேண்டும். கைது செய்யப்பட்டுள்ள யாழ். மாநகர மேயரை உடனடியாக விடுவிக்க வேண்டும் - என்றார்.

# மணியை உடன் விடுதலை செய்!

## அடைக்கலநாதன் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஏப்.09

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ள யாழ்ப்பாணம் மாநகர சபையின் மேயர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் ரெலோவின் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

தமிழர்களின் நிர்வாகத் திறமையைச் சகித்துக்கொள்ள முடியாத சிங்கள அரசு யாழ்.மாநகர மேயர்விஸ்வலிங்கம் மணிவண்ணனைக் கைது செய்துள்ளது. இதை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இத்தனை வருடங்களாக ஆட்சி செய்து கொண்டிருக்கும் இந்த அரசால் ஒரு மாநகர சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்திருக்கும் செயற்பாட்டை அவர்களால் செய்ய முடியவில்லை. அதனை ஒரு தமிழன் செய்து விட்டான் என்ற காழ்ப்புணர்ச்சியில் இந்தக் கைது நாடகம் அரங்கேறியுள்ளது.

சீருடை காரணமாக யாழ். மாநகர காவல் படையைத் தடை செய்து மேயர் மணிவண்ணனைக் கைது செய்துள்ளது சிறுபிள்ளைத்தனமாக உள்ளது. யாழ்.மாநகர காவல் படையினரின் இதேவகையிலான சீருடை கொழும்பு மாநகர சபையிலும் உள்ளது என யாழ்.மாநகர மேயர் மணிவண்ணன் விளக்கம் அளித்திருந்தார்.

அவ்வாறு விளக்கமளித்தும் அவரைக் கைதுசெய்திருப்பது இந்த அரசு தமிழர்கள் எந்த வகையிலும் முன்னேறி விடக் கூடாது என்பதில் உறுதியாக இருப்பதை எடுத்துக்காட்டுகின்றது.

சாதாரண சீருடையைப் பார்த்து அரசு அச்சம் கொள்வது எதற்காக என்று எமக்குத் தெரியவில்லை. எனவே, கைதுசெய்யப்பட்டுள்ள யாழ். மாநகர மேயர் மணிவண்ணனை உடனடியாக விடுதலை செய்வதோடு யாழ். மாநகரை சுத்தப்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட மாநகர காவல் படை சுதந்திரமாக இயங்குவதற்கும் அரசு அனுமதிக்க வேண்டும் - என்றுள்ளது.

# கஜன்களும் கண்டனம்

யாழ்ப்பாணம், ஏப்.09

யாழ்ப்பாணம் மாநகர சபை மேயர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வன்மையாகக் கண்டித்துள்ளது.

அவரை உடனடியாக விடுவிக்க வேண்டும் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தியுள்ளார்.

இந்த அரசின் பாசிச ஆட்சியை நோக்கிய நகர்வுகள் உச்சத்தை எட்டியுள்ளன. இனமற்றும் அரசியல் ரீதியான பாதுகாப்பின்மை மோசமாகியுள்ளது எனவும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.



இதேவேளை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தனது பேஸ்புக் பக்கத்தில், யாழ். மாநகர சபை மேயர் மணிவண்ணன் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டமையை மிகவும் வன்மையாகக் கண்டிப்பதுடன் அவரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்துகின்றோம் - என்று குறிப்பிட்டுள்ளார்.

## மணியைச் சந்தித்தார் சட்டத்தரணி திருக்குமரன்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப்.09


யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் வி.மணிவண்ணனை சட்டத்தரணியும் சகோதரனுமாகிய திருக்குமரன் இன்று மாலை வவுனியாவில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

யாழ். மாநகர முதல்வர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு வவுனியா கொண்டு செல்லப்பட்ட நிலையில் முதல்வர் சார்பில் சட்டத்தரணிகள் குழுவொன்று வவுனியா பயங்கரவாதத் தடுப்புப் பிரிவிற்கு சென்று சந்திக்கக்கோரியபோது முதலில் அனுமதி மறுக்கப்பட்டு அது தொடர்பில் கொழும்புக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. பதில் கிடைத்ததும் தெரிவிப்பதாக பயங்கரவாதத் தடுப்புப்பிரிவு பொலிஸாரால் பதிலளிக்கப்பட்டது.

இதன் பிரகாரம் மாலையில் கிடைத்த அனுமதியின் பெயரில் சட்டத்தரணியும் சகோதரருமாகிய திருக்குமரன் மாநகர முதல்வரைச் சந்திக்க அனுமதிக்கப்பட்டார்.

# மணி கைது இனவாதம், பாசிசம் அடிப்படையிலானது; அவரை உடனடியாக அரசு விடுதலை செய்யவேண்டும்

## தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் விக்கி கோரிக்கை



யாழ்ப்பாணம், ஏப்.09

யாழ்ப்பாணம் மாநகர மேயர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட் டுள்ளமை மோசமான இனவாதம், பாசிசம் ஆகியவற்றின் அடிப்படையிலானது. எனவே, மணிவண்ணனை விடுதலை செய்வதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன்.

யாழ்.மாநகர மேயர் கைது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட் டுள்ளவை வருமாறு:-

யாழ்.மாநகர காவல் படை என்ற பெயரில் மணிவண்ணன் அமைத்த சுகாதாரக் கண்காணிப்புக் குழுவின் சீருடை விடுதலைப்புலிகளின் காவல்துறையின் ஆடையை ஒத்திருப்பதாகக் கூறியே மணிவண்ணனை அதிகாலை வேளையில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு கைது செய்திருக்கின்றது.

தூய்மை பேணுவதைக் குறிக்கும் வகையில் வெளிநாடுகள் பலவற்றில் இள நீல ஆடைகளைக் காவல் கடமைகளில் ஈடுபடும் குழுக்கள் பயன்படுத்துவது வழமை. கொழும்பு மாநகர சபையும் இள நீல நிற சீருடையுடன் பணியாளர்களை அமர்த்தியுள்ளது. ஆனால், யாழ்.மாநகர சபை மேயருக்கு மட்டும் எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆகவே, யாழ்.மாநகர சபையின் ஊழியர்கள் அணிந்த ஆடை விடுதலைப் புலிகளின் காவல்துறையின் இள நீல நிற ஆடையை ஒத்ததாகக் காணப்படுகின்றது என்று கூறுவது நகைப்புக்கு இடமானது. அநியாயமாகக் கொல்லப்பட்ட தமிழ் மக்களின் ஆவிகள் அரச தலைவர்களை நிதானம் இழக்க வைத்து விட்டனவோ நான் அறியேன்.

ஒரு சிறிய மாநகரத்தை நிர்வகிப்பதற்கும் தமது பிரதேசங்களை தூய்மையாகவும், சுத்தமாகவும் வைத்திருப்பதற்கும் கூட தமிழ் மக்கள் தமது அதிகாரங்களைப் பயன்படுத்துவதைச் சகித்துக் கொள்ள முடியாமல் இருக்கும் இந்த அரசின் மனநிலையையும், செயற்பாடுகளையும் சர்வதேச சமூகம் புரிந்து கொள்ள வேண்டும்.

விடுதலைப்புலிகளின் சீருடைச் சீலையைப் போன்ற எந்த ஒரு சீலையையும் எவரும் பாவித்தலாகாது என்று ஒரு சட்டம் இயற்றப்பட்டுள்ளதோ நான் அறியேன். 12 வருடங்களுக்கு முன்னர் இறந்துபோன விடுதலைப்புலிகள் மீது அரசுக்கு அவ்வளவு பயமா என்று கேட்க வேண்டும் போல் தோன்றுகின்றது.

இந்த நாட்டின் மனித உரிமை மீறல்கள் எந்தளவு மோசமான ஒரு நிலைமைக்கு சென்றுகொண்டிருக்கின்றன என்பதை இந்தச் சம்பவம் எடுத்துக்காட்டுகின்றது. இலங்கையில், மனித உரிமைகள் மோசமாக மீறப்படுவதற்கும், முரண்பாடுகள் ஏற்படுவதற்குமான சூழ்நிலை காணப்படுகின்றது என்று ஐ.நா. மனித உரிமைகள் சபை ஆணையாளர் அண்மையில் வெளியிட்டிருந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தமையை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் நினைவுபடுத்த விரும்புவதுடன், ஆணையாளரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த எச்சரிக்கைகளைக் கவனத்தில்கொள்ளாமல் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தமையையும் தமிழ் மக்கள் அதைக் கண்டித்து இருந்தமையையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

ஆகவே, இனவாதம், பாசிசம் ஆகியவற்றின் அடிப்படையில் மனித உரிமைகள் மோசமாக மீறப்பட்டு வரும் நிலையில், தமிழ் மக்களின் பாதுகாப்பையும் உரிமைகளையும் உறுதிசெய்ய வேண்டிய தார்மீகப் பொறுப்பு சர்வதேச சமூகத்துக்கு இருக்கின்றது.

மணிவண்ணன் கைது தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபை உட்பட இலங்கையில் உள்ள வெளிநாடுகளின் தூதுவர்கள் உடனடியாகத் தலையீடு செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுவதுடன், மணிவண்ணனை உடனே விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரையும் வேண்டிக்கொள்கின்றேன் - என்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராயரின் கருத்துக்கள் அரசுக்கு ஆதரவானவை

## குற்றஞ்சாட்டுகிறார் அருட்தந்தை சக்திவேல்



பேராயர்கர்தினால்மல்கம்ரஞ்சித் ஆண்டகையால் முன்வைக்கப்பட்டு வரும் கருத்துக்கள் அரசாங்கத்துக்கு ஆதரவானவையாகவும் தமிழ் மக்களைப் புண்படுத்தும் வகையிலும் இருக்கின்றன என்று தேசிய இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை சக்திவேல் தெரிவித்தார்.

1995 ஆம் ஆண்டில் நவாலியில் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்ட போது மல்கம் ரஞ்சித் ஆண்டகையும் ஆயர்கள் பேரவையும் அமைதி காத்தனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரிகள் தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரால் வெளியிடப்பட்ட கருத்து, இந்த விடயத்தில் முஸ்லிம்களை குற்றவாளிகளாகக் காண்பிப்பதற்கான முயற்சியாகும். எனினும் நாடாளுமன்றத்தில் இடம்பெறும் உரைகள் மற்றும் எதிர்க்கட்சியினரால் முன்வைக்கப்படும் விமர்சனங்களிலிருந்து இதுவிடயத்தில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கும் மேலாக ஒரு சக்தி இயங்குகின்றது என்பதையே வெளிப்படுத்தியுள்ளது. எனினும் அவர்கள் யார் என்பது தொடர்பாக ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் வெளிப்படுத்தப்படவில்லை.

அதேபோன்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையால் முன்வைக்கப்பட்டுவரும் கருத்துக்கள் அரசாங்கத்துக்கு ஆதரவானவையாகவே இருக்கின்றன. இந்நிலையில் தற்போது அமைச்சர் சரத் வீரசேகரவின் கருத்தை அவர் ஏற்றுக்கொண்டால், முஸ்லிம்கள் மீது அவர் குற்றஞ்சாட்டுகின்றமை போன்ற நிலையே உருவாகும். எனவே இவ்விடயத்தில் அவர் மிகுந்த அவதானத்துடனும் நடுநிலைமையுடனும் செயற்படவேண்டும்.

மேலும் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் செயற்பாடுகள் தமிழ்மக்களைப் புண்படுத்துபவையாக அமைந்துள்ளன. ஏனெனில் 1995 ஆம் ஆண்டு நவாலியில் குண்டுத்தாக்குதல் இடம்பெற்றபோது, அது தமிழர்களின் மண்ணில் இடம்பெற்ற சம்பவம் என்பதால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையும் ஆயர்கள் பேரவையும் அமைதி காத்தனர். அதேபோன்று இறுதியுத்தத்தின் போது கொல்லப்பட்ட அருட்தந்தைகள் தொடர்பிலும் முகாம்களில் அடைக்கப்பட்ட, பாதிக்கப்பட்ட கத்தோலிக்கர்கள் தொடர்பிலும் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வாய்திறக்கவில்லை. நீதிக்கான குரல் என்பது பாதிக்கப்பட்டவர்களுக்கும் ஒடுக்கப்பட்டவர்களுக்குமானதாக இருக்கவேண்டும்.

ஆயர் இராயப்பு ஜோசப் 2009 ஆம் ஆண்டில் ஒரு லட்சத்து 46 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் எங்கே என்ற கேள்வியை முன்வைத்தமை சர்வதேசத்தின் கதவுகளைத் தட்டியது. அதனால் அவரை பிரிவினைவாதி என்றும் பயங்கரவாதி என்றும் விடுதலைப்புலிகளின் ஆதரவாளர் என்றும் குறிப்பிட்டபோது மல்கம் ரஞ்சித் ஆண்டகையும் ஆயர்கள் பேரவையும் அமைதிகாத்தமையுடன் இராயப்பு ஜோசப்பை தனிமைப்படுத்தும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்கள். இப்போதும் தமிழர்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களுக்கான குரலாக மல்கம் ரஞ்சித் ஆண்டகை இல்லாதிருக்கின்றமை அவரின் ஒருபக்கச்சார்பான போக்கையே வெளிப்படுத்தியுள்ளது. அவருடைய செயற்பாடுகள் தமிழ்மக்களைப் புண்படுத்தியுள்ளன என்று குறிப்பிட்டார்.

# எம்.பியாக சத்தியப்பிரமாணம் செய்தார் அஜித்மானப்பெரும





அஜித் மானபெரும நாடாளுமன்ற உறுப்பினராக, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டுள்ளார்.

நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டில் சிறைத்தண்டனை அனுபவித்துவரும் ரஞ்சன் ராமநாயக்கவின் நாடாளுமன்ற உறுப்புரிமை வெற்றிடத்துக்கே அஜித் மானப்பெரும நியமிக்கப்பட்டுள்ளார்.

ரஞ்சன் ராமநாயக்கவிற்கு நான்கு வருடங்கள், கடூழியச் சிறைத் தண்டனை விதித்து கடந்த ஜனவரி 12 ஆம் திகதி நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

இதனையடுத்து, தனது நாடாளுமன்ற ஆசனத்தை ரத்துச் செய்வதைத் தடுக்கும் வகையில் உத்தரவு பிறப்பிக்கக் கோரி, ரஞ்சன் ராமநாயக்க சார்பில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

ஆனாலும் குறித்த ரிட் மனுவை, கடந்த ஐந்தாம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றம் தள்ளுபடி செய்திருந்தது.

இந்நிலையில், கடந்த மூன்று மாதங்களாக நாடாளுமன்ற அமர்வுகளில் ரஞ்சன் ராமநாயக்கவால் கலந்துகொள்ள முடியாத நிலையில், அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி ரத்துச் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அந்த ஆசன வெற்றிடத்துக்காக அஜித் மானப்பெரும தற்போது நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மணல் மாபியா தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுசென்றார் சாணக்கியன்!

மணல் மாபியாக்களின் செயற்பாடுகள் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளார்.

பாதுகாப்பு ஆலோசனைக்குழுக் கூட்டம் கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றக் கட்டத் தொகுதியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்றது.

இதன்போதே இந்த விடயம் தொடர்பாக இரா.சாணக்கியன், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கவனத்துக்குக் கொண்டு சென்றிருந்தார்.

வவுனியா மற்றும் அம்பாறையில் முன்னெடுக்கப்பட்டு வரும் சட்டவிரோத மண் அகழ்வு தொடர்பாகவும் இரா. சாணக்கியன், ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு சென்றிருந்தார்.

அத்துடன், இந்த விடயம் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் இதன்போது வலியுறுத்தியிருந்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் சட்டவிரோத மண் அகழ்வு தொடர்பாக ஆராய்வதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், கோவிந்தன் கருணாகரம் ஆகியோர் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் சென்றிருந்தனர்.



இதன்போது சிலர் குறித்த இருவருக்கும் அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் செயற்பட்டிருந்த நிலையில், அது தொடர்பாக இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தின் போது தெரிவித்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன் மற்றும் கோவிந்தன் கருணாகரம் ஆகியோருடன் இணைந்து இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனும் அடுத்த சில நாள்களில் குறித்த பகுதிக்குச் சென்றிருந்தனர்.

இதன்போதும் மூவரையும் அச்சுறுத்தும் வகையில் சிலர் செயற்பட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பக்கவிளைவற்ற....

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருநூறு மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் உலகிலே ஹோமியோபதி மருத்துவத்தையும் மருந்துகளையும் எடுத்துக் கொள்ளுகிறார்கள் என்று அறியமுடிகிறது. குறைந்தவிலையில் மருந்துகளைப் பெற்றுக்கொள்ளவும் முடிகிறது. அதுமட்டுமல்ல, நிரந்தரத் தீர்வினை நல்கும் சிறப்பும் ஹோமியோபதிக்கு நிறையவே இருக்கிறது என்பது வெளிப்பட்டு நிற்கிறது. இலங்கையிலும் ஹோமியோபதிக்கு இடம் கொடுத்து சுதேசிய வைத்தியப் பிரிவினால் ஹோமியோபதி மருத்துவச் சபை அமைக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல ஹோமியோபதி வைத்தியசாலையும் நிறுவப்பட்டிருக்கிறது. ஹோமியோபதியினைப் பலரும் கற்கின்றார்கள் என்பதும் நோக்கத்தக்கதாகும்.

என்னதான் இருந்தாலும் உடல் நலன் மட்டும் இல்லாவிட்டால் எல்லாமே வெறுமைதான். வையத்துள் வாழவே பிறந்தோம். மரணம் வரும் என்பது யாவருக்கும் தெரியும். மரணத்தை எவருமே விரும்புவதில்லை. வாழும் காலம் வரை ஆனந்தமாய், அகமகிழ்வாய், அகநிறைவாய் வாழவே அனைவருமே ஆசைப்படுகிறோம். அந்த ஆசையும் அவசியமான ஆசையேயாகும். ஆசைப்பட்டால் மட்டும் போதுமா ? ஆசைப்படி வாழவேண்டுமானால் ஆரோக்கியத்தை அனைவரும் காத்திட, கருத்தினில் எடுத்திட வேண்டும். ஆரோக்கியத்தை அளிப்பதற்காக அவதாரம் எடுத்ததுதான் மருத்துவம். அந்த மருத்துவத்தில் ஹோமியோபதியும் ஒன்று. அந்த ஹோமியோபதி எங்கள் ஆரோக்கியத்துக்கு நல்வழிகாட்டியாய் தலைநிமிர்ந்து நிற்கிறது என்னும் செய்தி பெருவெளிச்சமாய் விரிகிறது அல்லவா! அந்த வெளிச்சத்தை அளித்த மாமேதை டாக்டர் சாமுவேல் ஹனிமனை நினைப்போம். அவரின் நினைவாக ஹோமியோபதி நன்னாளை யாவரும் பெருமையுடன் நினைவு கூருவோம்.

# புத்தாண்டை முன்னிட்டு மேலதிக போக்குவரத்து

புத்தாண்டை முன்னிட்டு தமது சொந்த இடங்களுக்கு செல்லும் மக்களின் வசதிக்காக மேலதிக பஸ் மற்றும் ரயில்களை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.

அந்த வகையில், நேற்று (வெள்ளிக்கிழமை) முதல் எதிர்வரும் 16ஆம் திகதி வரை இந்த விசேட ரயில் மற்றும் பஸ் சேவைகள் இடம்பெறும் என அமைச்சு தெரிவித்துள்ளது.

வழமையாகப் பயணிக்கும் எண்ணிக்கையை விட மேலதிகமாக ஆயிரத்து 192 அரச பஸ்களும் 21 ரயில்களும் சேவையில் ஈடுபடுகின்றன. மேலதிக ரயில்கள் 57 பயண சேவைகளில் ஈடுபடுகின்றன.

இதுதவிர ஆயிரத்து 800 தனியார் பஸ்களும் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

மக்களுக்கு உயர்ந்தபட்ச சேவையை வழங்கும் வகையில் இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்களின் விடுமுறை ரத்து செய்யப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று பரவலைக் கருத்திற்கொண்டு பஸ்களின் ஆசன எண்ணிக்கைக்கு மாத்திரம் பயணிகள் பயணிக்க வேண்டும். மோட்டார் வாகன பிரதி பொலிஸ் மா அதிபர் இதனை அவசியம் கண்காணிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# 5 லட்சத்து 68 ஆயிரம் தடுப்பூசிகள் தேவைப்படுகின்றன எனத் தகவல்!



இலங்கையில் கொரோனாத் தடுப்பூசியின் இரண்டாம் கட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 23ஆம் திகதி முதல் ஜூலை மாதம் 06 ஆம் திகதி வரை இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன்போது 9 லட்சத்து 24 ஆயிரத்து 687 பேருக்கு கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், 3 லட்சத்து 56 ஆயிரத்து 730 தடுப்பூசிகள் மாத்திரமே களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன எனவும் சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# எண்ணெய்க் கசிவினால் ஏற்பட்ட பாதிப்புக்கு 342.3 கோடி ரூபா இழப்பீட்டை வழங்குக

## சட்டமா அதிபர் உத்தரவு

எண்ணெய் கசிவால் சமுத்திரத்திற்கு ஏற்பட்ட பாதிப்புக்கு 190.22 லட்சம் அமெரிக்க டொலர் இழப்பீட்டை வழங்குமாறு எம்.டி. நியூ டயமண்ட் கப்பல் நிறுவனத்துக்கு சட்டமா அதிபர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

குறித்த இழப்பீட்டுத் தொகை இலங்கை ரூபா மதிப்பில் 342.3 கோடி ரூபாவாகும். எம்.டி.நியூ டயமன் என்ற கப்பலில் கடந்த 2020 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 4 ஆம் திகதி தீப்பரவல் ஏற்பட்டது.

குவைத்திலிருந்து, இந்தியாவின் ஒடிசா, பெரடிப் துறைமுகம் நோக்கி பயணித்துக்கொண்டிருந்த எம்.டி. நியூ டயமண்ட் எனும் வணிகக் கப்பல், பானம – சங்கமன்கண்டியிலிருந்து 38 கடல் மைல் தொலைவில் தீ விபத்துக்குள்ளானதாக அறியப்படும் நிலையில், அந்த கப்பலில் பரவிய தீயை அணைக்க செலவிடப்பட்ட தொகையை, ஈடு செய்ய 34 கோடி ரூபாவை , சட்ட மா அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி தப்புல டி லிவேரா கப்பல் உரிமையாளர்களிடம் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# போலி முகவரிக்கு வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்பட்ட போதைப் பொருள்கள் மீட்பு

வெளிநாடுகளிலிருந்து போலி முகவரிகளுக்கு அனுப்பப்பட்ட ஐந்து பொதிகளிலிருந்து ஒரு தொகை போதைப்பொருள்கள் சுங்கப் பிரிவு அதிகாரிகளால் கொழும்பு மத்திய அஞ்சல் பரிவர்த்தனையிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. இவற்றின் பெறுமதி 70 லட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த பொதிகள் வெரஹேர, ஹோமாகம மற்றும் கண்டி பகுதிகளைச் சேர்ந்த முகவரிகளுக்கு இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் ஜேர்மன் ஆகிய நாடுகளிலிருந்து அனுப்பப்பட்டுள்ளன. இந் நிலையில் ஊடகங்கள் முன்னிலையில் குறித்த பொதிகளை சுங்கப் பிரிவு அதிகாரிகள் கடந்த வியாழக்கிழமை மாலை திறந்தனர்.

அவற்றிலிருந்து 40லட்சம் ரூபா பெறுமதியுடைய குஷ் எனப்படும் 278 கிராம் கஞ்சாவையும், 30 லட்சம்; ரூபா பெறுமதியான 'எக்ஸ்டஸி' என்று அழைக்கப்படும் 400 போதை மாத்திரைகளையும் பறிமுதல் செய்தனர்.










# பரீட்சைகளுக்கான திகதிகள் அறிவிப்பு

கொழும்பு, ஏப்.10

2021ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. உயர்தரம் மற்றும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைகள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நடைபெறும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி, உயர்தரப் பரீட்சையை ஒக்ரோபர் 4ஆம் திகதி முதல் ஒக்ரோபர் 30ஆம் திகதி வரை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இதேவேளை, தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையை ஒக்ரோபர் 3 ஆம் திகதி நடத்துவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அத்துடன் இந்த வருடத்துக்கான ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை அடுத்த வருடம் ஜனவரி மாதம் இறுதி வாரத்தில் நடைபெறும் என்றும் அவர் மேலும் கூறினார்.

இலங்கையில் உள்ள அனைத்து அரச பாடசாலைகளிலும் முதலாம் தவணை விடுமுறை இன்று முதல் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி இரண்டாம் தவணைக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 19ஆம் திகதி ஆரம்பமாகும் என்றும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.



தவத்திரு விபுலானந்த அடிகளார்
129ஆவது பிறந்த நாள், பங்குனி பூரட்டாதி (10.04.2021)
இலங்கையின் 12 மாவட்டங்களில் 16 திருக்கோயில்களில்
தவமிருக்கிறோம் - உண்ணா நோன்பு நோற்கிறோம் - வழிபடுகிறோம்
மூன்று கோரிக்கைகளை முன் வைக்கிறோம். ஆதரிப்பீர்.
மறவன்புலவு க. சச்சிதானந்தன் +94 772 754 864




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.04.2021 இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீருடையின் நிறத்தைத் தெரிவு செய்யும் அதிகாரத்தைக்கூட தமிழர்களிடம் விட்டுவைக்க அரசாங்கம் தயாராக இல்லை!

## மணிவண்ணன் கைது குறித்து ஐங்கரநேசன் கடுங்கண்டனம்



யாழ்ப்பாண மாநகரசபையின் முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுள்ளார். விடுதலைப் புலிகளின் எண்ணங்களை முன்னெடுக்கவும் விடுதலைப் புலிகளை மீளுருவாக்கவும் முயன்றமையாலேயே இவர் கைது செய்யப்பட்டார் எனக் காவல்துறையின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்திருக்கிறார்.

யாழ்.மாநகர சபையில் சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த விடயங்களைக் கண்காணிப்பதற்கென உருவாக்கப்பட்ட பணிக்குழாமுக்கு வழங்கப்பட்ட நீலநிறச் சீருடைகள் விடுதலைப்புலிகளின் காவல் துறையின் சீருடைகளை ஒத்திருக்கின்றன எனக் குற்றம் சாட்டியே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தென்னிலங்கை மாநகர சபைகள் சிலவற்றில் பணியாளர்கள் இதே நீல நிறச் சீருடைகளைப் பயன்படுத்தி வருகிறார்கள். இந்நிலையில் மணிவண்ணனைக் கைது செய்ததன் மூலம் சீருடையின் நிறத்தைத் தெரிவுசெய்யும் அற்ப அதிகாரத்தைக்கூட தமிழர்களிடம் விட்டு வைக்கத் தான் தயாராக இல்லை என்பதைப் பேரினவாத அரசாங்கம் தெளிவாகச் சொல்லியிருக்கிறது என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தனது கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

மணிவண்ணன் கைது தொடர்பாகத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் அலுவலகத்தில் இன்று பொ. ஐங்கரநேசன் நிகழ்த்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தனது கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

பத்திரிகையாளர் சந்திப்பில் தொடர்ந்து அவர் தெரிவிக்கையில் –

விடுதலைப் புலிகளின் இராணுவச் சீருடைகள் அவர்களுக்கே உரித்தான தனித்துவமான வரிகளை அடையாளமாகக் கொண்டவை. ஆனால், காவல் துறைக்கு அவர்கள் பயன்படுத்திய நீலநிறச் சீருடைகள் உலகப் பொதுவானவை. காக்கிச் சட்டைகள் மக்களின் மனங்களுக்கு அந்நியப்பட்டதாக உள்ளதால் மனங்களுக்கு மிகவும் நெருக்கமான உளவியல் நட்புமிக்க நீல நிறத்தைப் பெரும்பாலான நாடுகளில் காவல்துறையும் தனியார் பாதுகாப்புத் துறையும், இதர நிறுவனங்களும் சீருடைகளில் பயன்படுத்த ஆரம்பித்துள்ளன. இந்நிலையில், யாழ் மாநகர சபை நீலநிறச் சீருடையைத் தெரிவு செய்ததைப் புலிகளை மீளுருவாக்கம் செய்ய முயல்வதாக அரசாங்கம் சொல்வது எவ்வித்திலும் ஏற்புடையது அல்ல.

உள்ளூராட்சிச் சபைகள் சுயாதீனமானவை. மாகாணசபைகளின் நிர்வாகத்தின்கீழ் இருந்தாலும் உள்ளூராட்சிச் சபைகளின் சுயாதீனத்தில் மாகாணசபைகள் தலையிடுவதில்லை. இந்நிலையில் மாகாணசபையின் கீழுள்ள மாநகர சபையின் சீருடை விடயத்தில் காவல் துறையின் மூலம் அரசாங்கம் தலையிடுகின்றமை அதிகாரப் பகிர்வுக்கு எதிரானது. சீருடையை வடிவமைத்த விடயத்தில் ஏதேனும் நிர்வாக ரீதியான முறைகேடுகள் இருப்பின் உள்ளூராட்சித் திணைக்களமே அதற்கான விசாரணையை மேற்கொள்ள முடியும். மாகாணசபைகள் இயங்காத நிலையில் ஆளுநர் இந்த விடயத்தில் தலையிட்டிருக்க முடியும். இதைத்தாண்டி பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் இந்த விடயம் கையாளப்படுவதை அதிகாரப் பரவலைக் கோரும் சிறுபான்மை மக்களுக்குப் பேரினவாத அரசாங்கம் விடுத்திருக்கும் ஓர் எச்சரிக்கையாகவே கருத வேண்டும்.

அரசாங்கத்துடன் சேர்ந்து இயங்கும் தமிழ்க் கட்சிகள் இதனை நியாயப்படுத்தக்கூடும்.

ஆனால், தங்களுக்கு இடையே முரண்பாடுகள், பிளவுகள் இருந்தாலும் தமிழ்த் தேசியக் கட்சிகள் யாவும் யாழ்ப்பாண மாநகர முதல்வரின் கைதுக்கு எதிராகவும் அவரின் விடுதலையை வேண்டியும் ஓரணியில் நின்று குரல் கொடுக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

# மணியின் கைது சட்ட விரோதம்!

## சட்டத்தரணி ஸ்ரீகாந்தா காட்டம்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீளுருவாக்கம் செய்ய முயன்றார் என்ற குற்றச்சாட்டின் பேரில் யாழ்ப்பாண மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பது சட்டத்துக்கு விரோதமானது.

– இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவரும் சட்டத்தரணியுமான ந.ஸ்ரீகாந்தா.

மணிவண்ணனின் கைது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

யாழ்ப்பாண மாநகர சபைக்கென ஐந்து பேர் கொண்ட காவல் படையை, புலிகள் இயக்கத்தின் காவல் துறையின் சீருடையை ஒத்த சீருடையுடன் அமைத்து செயற்படுத்தினார் என்பதே அவருக்கு எதிரான குற்றச்சாட்டின் உள்ளடக்கம். யாழ்ப்பாண மாநகரின் பொது இடங்களில் குப்பை கொட்டுவதையும், வெற்றிலை துப்புவதையும், பொது இடங்களில் வாகனங்கள் நிறுத்தப்படுவதையும், சட்ட விரோத செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதையும் தடுப்பதற்கு, இந்தக் காவல் படை அமைக்கப்படுவதாக மாநகர முதல்வரால் பகிரங்கமாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தச் சூழ்நிலையிலேயே, மாநகர முதல்வர் மீது பயங்கரவாதத் தடைச்சட்டம் இப்போது பிரயோகிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காவல்படை பற்றிய தவறான அல்லது திரிபுபடுத்தப்பட்ட வியாக்கியானத்தின் அடிப்படையில் மாநகர முதல்வர் மீதுசட்ட நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டிருப்பதாக நாம் கருதுகின்றோம்.

ஏனெனில், காவல்படை என்ற பெயருடன், ஐந்து மாநகர சபை ஊழியர்களை உள்ளடக்கி அறிவிக்கப்பட்ட மேற்படி காவல் படை, அதன் நோக்கங்கள், பணிகள் என்பனவற்றின் அடிப்படையில் ஒரு பொலிஸ் படையாக ஒருபோதுமே கருதப்பட முடியாதது ஆகும்.

நகரின் சுகாதார மேம்பாட்டைப் பிரதான நோக்கமாகக் கொண்ட இந்தக் குழுவுக்கு சூட்டப்பட்டிருக்கும் 'காவல் படை' என்ற தமிழ்ப் பெயரை அடிப்படையாக வைத்து, அதனை ஒரு பொலிஸ் படையாக அர்த்தப்படுத்துவது என்பது தவறானது.

எமது நாட்டில் 'பொலிஸ் சேவை' மற்றும் 'பொலிஸ் நிலையம்' என்பனவற்றுக்குத் தமிழில் முறையே 'காவல் துறை', 'காவல் நிலையம்' என்ற சொற்கள் உத்தியோக பூர்வமாகப் பிரயோகிக்கப்படுவதில்லை.

'பொலிஸ்' என்ற ஆங்கிலச் சொல்லே உத்தியோகபூர்வமாகத் தொடர்ந்து நடைமுறையில் உள்ளது. காவல் துறை,; காவல் நிலையம் என்ற பதங்கள் சில பல சந்தர்ப்பங்களில் மட்டுமே ஊடகங்களால் உபயோகப்படுத்தப்படுகின்றன.

மேலும், குறித்த காவல் படைக்குத் தெரிவு செய்யப்பட்ட ஐந்து மாநகர சபை பணியாளர்கள் எவருக்கும், வழக்கமாக பொலிஸாருக்கு வழங்கப்படும் எந்தவொரு பயிற்சி நெறியும் அளிக்கப்பட்டிருக்கவில்லை என்பதோடு, ஒரு குண்டாந்தடி கூட, எவருக்கும்கொடுக்கப்பட்டிருக்கவில்லை.

உண்மையில், இந்தக் காவல் படை ஒரு சுகாதார சேவை துணை அணியாகவும், பொது இடங்களில் வாகனங்கள் நிறுத்தப்படுவதை ஒழுங்குபடுத்தும் ஒரு பாதுகாப்புக் குழுவாகவுமே அமைக்கப்பட்டிருந்தது என்பது தெளிவானது.

தனியார் பாதுகாப்பு சேவை நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களின் சீருடைகளை ஒத்தவிதத்திலேயே, இந்த மாநகர சபை ஊழியர்களின் சீருடைகளும் அமைந்திருந்தன.

இருந்தும், காவல் படை என்ற பெயரும், சீருடையின் நிறங்களும் அநாவசிய சந்தேகத்திற்கு அடிகோலியுள்ளன.

இந்த அமைப்பை நிறுவியதன் மூலம் சட்ட ஏற்பாடுகள் எவையாவது மீறப்பட்டிருந்தால், சாதாரண சட்டத்தின் கீழ் அரசாங்கம் தாராளமாக நடவடிக்கைகளை எடுத்திருக்க முடியும். மாறாக, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இந்த விவகாரத்தில் அரசாங்கம் பிரயோகித்திருப்பது யதார்த்த பூர்வமான அணுகுமுறையோ அல்லது நீதியான நடவடிக்கையோ அல்ல.


பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பிணை வழங்கும் அதிகாரம் என்பது, நீதிமன்றங்களுக்குப் பதிலாக சட்ட மா அதிபருக்கு மாத்திரமே உள்ளது என்பதாலும், 18 மாதங்களுக்கு மேற்படாத காலத்திற்கு சந்தேகநபர் ஒருவரைத் தொடர்ந்து தடுப்புக்காவலில் வைத்திருக்கும் அதிகாரம் பாதுகாப்பு அமைச்சருக்கு வழங்கப்பட்டிருப்பதாலும் யாழ்ப்பாண மாநகர முதல்வர் சம்பந்தப்பட்டுள்ள இந்த விவகாரம் அநாவசியமானதோர் அரசியற் சர்ச்சையை ஏற்படுத்தக் கூடியது என்று திட்டவட்டமாக எதிர்வு கூற முடியும்.

மாநகர முதல்வருக்கும், மாநகர சபைக்கும் எதிராகக் குற்ற முறைப்பாடு அளித்த நபர்களும், நாடாளுமன்றத்தில் இந்த விவகாரத்தை எழுப்பி, உரத்துக் குரல் கொடுத்த எதிரணியான ஐக்கிய மக்கள் சக்தியும் குறுகிய அரசியல் நோக்கங்களுடன் செயற்பட்டுள்ளன.

பயங்கரவாத தடைச்சட்டத்தை நாடியதன் மூலம் இதனை உரிய முறையில் கையாள அரசாங்கமும் தவறியுள்ளது.

இப்பொழுது கூட, நிலைமை ஒன்றும் கைமீறிப் போய்விடவில்லை. இந்த விவகாரத்தை முழுமையாக மீள் பரிசீலனை செய்து, எந்தவொரு சட்ட மீறலும் நிகழ்த்தப்பட்டிருப்பதாக அரசாங்கம் கருதுமானால், பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்குப் பதிலாக, சாதாரண சட்டத்தின் கீழ் உரிய சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்.

உள்ளூராட்சி அமைப்பு ஒன்றால் மேற்கொள்ளப்பட்ட பகிரங்கமான ஏற்பாடு ஒன்று தொடர்பில் பயங்கரவாத தடைச் சட்டத்தை பிரயோகித்திருப்பதும் விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீளுருவாக்கம் செய்ய முயன்றதாகப் பாரதூரமான குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருப்பதும், பயங்கரமானதோர் சூழ்நிலையை ஏற்படுத்துகின்றன என்பதை பொறுப்போடு சுட்டிக்காட்ட நாம் விரும்புகின்றோம்.



எலிகளை பிடிப்பதற்காக வீடுகளில் செல்லப் பிராணிகளாக வளர்க்கப்படும் பூனைகள் தொடர்பில், அவை புலிகளை ஒத்திருக்கின்றன என்று கூறுவதோ அல்லது கருதுவதோ, பாரபட்சமின்றி சிந்திக்கும் எவராலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கின்றோம். – என்றுள்ளது.

# மேயரின் செயலை அறியாத்த தவறாக கருதி மன்னிக்க கோட்டாவிடம் கோரினார் டக்ளஸ்

யாழ்.மேயர் மணிவண்ணனின் தவறை அறியாத் தவறாக கருதி மன்னிப்பு வழங்குங்கள் என ஜனாதிபதியிடம் அமைச்சர் டக்ளஸ் கோரிக்கை விடுத்துள்ளார் என ஈ.பி.டி.பி செய்திக் குறிப்பு ஒன்று தெரிவித்தது.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட நகரின் சுத்தம் சுகாதார போக்குவரத்து உள்ளிட்டவற்றை கவனிக்க முதல்வரால் நியமிக்கப்பட்ட பொலிஸ் படையணி தொடர்பில் ஏற்பட்ட சர்ச்சையைத் தொடர்ந்து மணிவண்ணன் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

இவ்விடயத்தில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்ற நிலையில் குறித்த பணியாளர்களை நியமித்தது, அவர்களுக்கு சீருடை வழங்கியது தொடர்பில் ஏற்பட்டிருக்கக் கூடிய தவறுகளை அறியாத் தவறாக கருதி மணிவண்ணனை விடுவித்து மாநகரசபையின் செயற்பாடுகளை மீண்டும் இயல்பு நிலைக்கு திரும்புவதற்கு ஆவன செய்யுமாறு இன்று (வெள்ளியன்று) ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்டுக்கொண்டிருந்தார்

அத்துடன் குறித்த விடயம் தொடர்பில் வியாழன் இரவு யாழ் பொலிஸ் நிலையம் அழைத்து விசாரிக்கப்பட்டிருந்த மணிவண்ணன் வெள்ளி காலை குற்றப்புலனாய்வு திணைக்களத்தால் வவுனியாவில் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டிருந்தார். இந்நிலையில் இவ்விடயம் தொடர்பிலும் கடல்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது

இந்நிலையில் நேற்று இரவு மீண்டும் யாழ் மேல் நீதிமன்றுக்கு அழைத்துவரப்பட்ட மணிவண்ணன் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மணிவண்ணன் கைது செய்யப்பட்டிருந் நிலையில் அவரை விடுவித்து தருமாறு பல்வேறு தரப்பினரும் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. – என்று அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org